
ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

ஜூலை - 2019
சமய - சமூக - இலக்கிய வெளியீடு
50/=
ஆரம்பம் 1969 பெப்ரவரி

அறிவோம்.. அறிவிப்போம்...



தயவு செய்து
காணாமல் போனோர்
இருக்கிறார்களா...?
இல்லையா...?
என்பதையாவது
சொல்லிவிடுங்கள்...

முன்னோர்கள்
ஒன்றும்
முட்டாள்கள்
இல்லை.

# தொண்டன்

ஜுலை- 2019

மலர் - 51 இதழ் - 06

ஆசிரியர்

அருட்தந்தை. R. பயஸ் பிரசன்னா

கணினி வடிவமைப்பு

சுபாஜெனி சங்கர்

வெளியீடு

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

முகவரி

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். - 44,
மட்டக்களப்பு.

பதிப்பகம்

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.


## உள்ளே...


அன்புடன் உங்களோடு ........ 01

மட்டக்களப்பு மறைமாவட்ட ........ 02

படைப்புழுவாம் துயர் ........ 06

நாட்டு வைத்தியர் ........ 07

தாய்மையின் தனிமை ........ 09

மாணவர் பக்கம் ........ 10

வெற்றியின் இரகசியம் ........ 11

யார் ஏழை, ........ 13

உதவி செய்யாமல் ........ 14

கொடிது கொடிது வறுமை ........ 16

கத்தோலிக்கத் திருமறை ........ 18

மகிழ்ச்சி ........ 20

நான் ஏழையாய் இருந்தபோது ........ 22

திருஅவைச் செய்திகள் ........ 23

அதி விசேஷம் ........ 24

சின்ன விசயங்கள் சிறந்த ........ 25

வினாவிடைப் போட்டி ........ 26

திருவிவிலியம் கற்போம் ........ 27

அறிவை வளர்ப்போம் ........ 28



ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)



SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com




விலை: : 50/=

ஆண்டுச் சந்தா :950/=

(தபாற் செலவு உட்பட)

# அன்புடன் உங்களோடு ...


## வீணாக்க வேண்டாம் ...



**வே**சம் போட்டால் நல்லவன் என்பார்கள்,
காசு இருந்தால் கடவுள் என்பார்கள்,
உண்மையைச் சொன்னால் பைத்தியக்காரன் என்பார்கள்,
அன்பு காட்டினால் ஏமாளி என்பார்கள்,
எடுத்துச் சொன்னால் கோமாளி என்பார்கள்.

எத்தனை வேஷம் .....
எத்தனை ஆடம்பரம் ....
எத்தனை அலங்காரம் ....
எத்தனை வர்ணங்கள் ....
எத்தனை பொறாமை ....
எத்தனை போட்டி ....
எத்தனை ஏற்றத் தாழ்வு .....

அத்தனை குணம் படைத்த மனிதன் மறந்துவிடுகின்றான் மரணத்தை நோக்கி நகர்கிறோம் என்று. இறைவன் இல்லை என்றால்தான் இவர்களுக்கு வாழ்வு. ஆனால் இறைவன் இருக்கின் றான். அவன் விருப்பப்படியே அனைத்தும் நடந்தேறும்.



இந்த உலகமே உன்னை ஏமாற்றுகிறது. எதையும் வீணாக்காதே! காலங்கள் மீண்டும் வராது. உறவுகள் திரும்பக் கிடைக்காது. நாம் எல்லோரும் ஒரு தடவை என்ன செய்கிறோம், எதை நோக்கிப் போகிறோம் என்று யோசிக்க ஆரம்பித்தாலே நல்லது நடக்கும்.

ஏனென்றால்,
மனிதன் தாமே சுயமாக யோசிக்கும் வேளையில்,
நேசிப்பது உன்னை இறைவன் .....

- ஆசிரியர் -

"என் கட்டளைகளைக் கடைப்பிடி;
நீ வாழ்வடைவாய்"
நீதிமொழி 7:2

# மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் 7ம் ஆண்டு நிறைவு



- பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை -
**மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்**

*2012ம்* ஆண்டு யூலைத் திங்கள் 3ம் திகதி அன்று திருத்தந்தை 16ம் பெனடிக், மட்டக்களப்பு மறைமாவட்டத்தை திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்திலிருந்து பிரித்து தனியொரு மறைமாவட்டமாக, புதியதோர் மறை மாவட்டமாகப் பிரகடனப்படுத்தினார். அதன் ஏழாவது ஆண்டு நிறைவை மட்டக்களப்பு மறைமாவட்டம் கொண்டாடுகின்றது.

விவிலியத்தின்படி இலக்கம் 7 நிறைவான எண்ணாகும். "கடவுள் தன் படைப்பு வேலை யெல்லாம் முடித்தபின் 7ம் நாள் ஓய்ந்திருந்தார்" (தொ.நூ 2:1) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மறை மாவட்டத்தின் வளர்ச்சி பற்றிச் சிந்திப்பதற்கும், இறைவனின் உடனிருப்பைப் பற்றித் தியானிப்பதற்கும், இறைவனின் அருட்பொழிவால் இடம்பெற்ற, இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற அரும்பெரும் செயல்களை எண்ணி, வியந்து, போற்றிப் புகழ்ந்து நன்றி கூறுவதற்கும், இறையரசைக் கட்டியெழுப்பத் தடையாக இருக்கும் காரணிகளை இனம் கண்டு அவற்றைப் புதுப்பிக்கும்படி தூயஆவியானவரை நாடவும் ஏற்றதொரு காலமாகும். திருப்பாடல் ஆசிரியர் பாடுவது போன்று "நீதியான உம் நெறிமுறைகளைக் குறித்து ஒரு நாளைக்கு ஏழு முறை உம்மைப் புகழ்கிறேன்" (தி.பா 119:164) எனப் பாடுவோம்.

பல்லின, பல்சமய, பல மொழி பேசுகின்ற மட்டக்களப்பு - அம்பாறை ஆகிய இரு சிவில் மாட்டங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ள மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் முழுச் சனத் தொகை 1,196,779 ஆகும். அதில் மட்டக்களப்பு மாவட்டத்தின் சனத்தொகை 535,697 ஆகவும் அம்பாறை மாவட்டத்தின் சனத்தொகை 661,082 ஆகவும் அமைந்துள்ளது. இதனை பின்வரும் அட்டவணை விளக்குகின்றது.

| இலங்கையின் சனத்தொகை 21,113,968 | | |
|---|---|---|
| சிவில் ரீதியில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தின் மொத்த சனத்தொகை | | 1,289,000 |
| மட்டக்களப்பு மாவட்டம் | 570,000 | |
| அம்பாறை மாவட்டம் | 719,000 | |
| **மொத்தம்** | 1,289,000 | 1,289,000 |

## மொழி ரீதியில் மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் சனத்தொகை

| மாவட்டம் | மொத்தம் | கத்தோலிக்கர் |
|---|---|---|
| தமிழ் | | 45,424 |
| சிங்களம் | | 714 |
| **மொத்தம்** | **1,289,000** | **46,138** |

## மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் கத்தோலிக்கரின் எண்ணிக்கை - 46,138 (3.5%)

| | | |
|---|---|---|
| மட்டக்களப்பு மறைக் கோட்டம் | 30,119 | *21 பங்குகள்* |
| கல்முனை மறைக்கோட்டம் | 16,019 | *9 பங்குகள்* |
| **மொத்த எண்ணிக்கை** | **46,138** | ***30 பங்குகள்*** |

## பணி புரிவோர்

| | |
|---|---|
| மறை மாவட்டக் குருக்கள் | 39 |
| துறவற சபை சார்ந்த குருக்கள் | 16 |
| பெண் துறவியர் | 77 |
| ஆண் துறவியர் | 16 |
| பக்திச் சபைகள் | 11 |




வத்திக்கான் சங்கத்தின் மறுமலர்ச்சிக் கருத்துக்களையும், புதுமைச் சிந்தனைகளையும் பொதுநிலையினருக்குக் கற்பித்து அவர்களைப் படிப்படியாக வளர்த்தெடுக்க பல்வேறு ஆணைக் குழுக்களும் முயன்றிருப்பது பாராட்டுதற்குரியது. கடந்த 7 ஆண்டுகளாக இறைவன் இப்பணிக் குழுக்கள் வழியாக செய்த அனைத்து நன்மைகளுக்காகவும் அரும்பெரும் செயல்களுக்காகவும் நன்றி கூறுவோம்.

மாறிவரும் இன்றைய இலங்கைச் சூழலில் பணிக் குழுக்கள் கடந்து வந்த பாதையை மட்டும் பின்னோக்கிப் பார்த்து, பெருமையும், மகிழ்ச்சியும் அடைவதைத் தாண்டி, ஆவியாரின் துணையோடு காலத்தின் அறிகுறிகளைக் கணித்து அதன் ஒளியில் எதிர்காலத்தில் பொதுநிலையினரின் முழுமையான உருவாக்கத்திற்காக முனைப்போடும், ஈடுபாட்டோடும் பணியாற்றுவது இன்றியமையாதது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

**திருச்சபை என்பது ......**

திருச்சபை ஒரு தோழமைச் சமூகம். திருச்சபையைக் குறிக்கும் மூல கிரேக்கச் சொல் ‘எக்லேசியா” (EKKLESIA) - ‘அழைக்கப்பட்டவர்கள் ஒன்று கூடுதல்’ எனப் பொருள்படும். **ஒன்று கூடுதல்** தோழமையைக் குறிக்கிறது. இந்த **ஒன்று கூடுதல்** இல்லையேல், திருச்சபையே

இல்லை. இயேசுவின் பெயரால் ஒன்று கூடும் இச்சமூகத்தின் அடிப்படை இயல்பு உறவு ஒன்றிப்பு. திருமுழுக்கினால் ஒரே கடவுளின் அன்புப் பிள்ளைகளாக விளங்குவதாலும், ஒரே ஆண்டவரின் திருவிருந்தில் பங்கேற்பதாலும், ஒரே தூய ஆவியால், நற்செய்திப் பணிக்கு அனுப்பப்படுவதாலும் அவர்கள் ஒருவருக்கொருவர் உடன்பிறப்புக்களாகின்றனர்.

"இறைமக்கள் சமூகமாகிய திருச்சபையில் கூட்டுப் பொறுப்பும், இணைந்த செயல்பாடும் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்" எனச் சங்கம் தொடர்ந்து சுட்டிக் காட்டுகிறது. ஒருவர் முடிவெடுத்து அதை மக்கள்மீது வலிந்து திணிப்பது மன்னராட்சிக் காலத்திலும், சர்வாதிகார ஆட்சியின் போதும் நடைபெற்றது. ஆனால், இன்று முடியாட்சி மண்ணோடு மண்ணாய் மக்கி மறைந்து விட்டது.

திருச்சபையை ஒரு குடியாட்சி என்று நாம் சொல்ல முடியாது. இருப்பினும் அது இயேசு ஏற்படுத்திய இறையாட்சியின் விழுமி யங்களின் அடிப்படையில் அமைந்த ஒரு சமத்துவ, சகோதரத்துவ சமூகம் ஆகும். ஆதலால் ஒருவரோடு ஒருவர் மனம் திறந்து உரையாடி, கருத்துக்களை ஒளிவு மறைவின்றிப் பகிர்ந்து ஒன்றுபட்டு முடிவுகளை எடுப்பது கட்டாயமாகின்றது.

**மறைமாவட்டம் என்பது .....**

ஒரு வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் பணிபுரியும் தனிப்பட்ட திருச்சபைகள் அல்லது மறைமாவட்டங்கள் மறைத்தூதுவர்களின் வழி வருபவர்களான மறை மாவட்ட ஆயர்கள் தங்கள் குழுவின் தலைவரான உரோமை ஆயருடனும் இணைந்து ஒரு குழுவாகச் செயல்படுகின்றனர். மறைமாவட்ட ஆயர்கள் திருத்தந்தையின் பிரதிநிதிகள் அல்ல; கிறிஸ்துவின் பிரதிநிதிகள். எனவே தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட கடவுளின் மக்களைக் கிறிஸ்துவின் பெயரால் தங்களுக்கே உரித்தான ஆட்சியுரிமையுடன் வழி நடத்துகின்றனர்.

மறைமாவட்ட ஆயர்களுக்கு தங்களுடைய சொந்த மறைமாவட்டத்தின் நலன் மட்டுமல்ல, அனைத்துலகத் திருச்சபையின் நலனிலும் ஏனைய தனிப்பட்ட திருச்சபைகளின் நலனிலும் அக்கறையும், பொறுப்பும் உண்டு. தனிப்பட்ட திருச்சபைகள் எனப்படும் மறைமாவட்டங்கள் ஆயர்களின் தனிப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இச்சபைகளில் மறைமாவட்ட போதிக்கும் பணி, தூய்மைப் படுத்தும் பணி, ஆளும் பணி ஆகிய முப்பெரும் பணிகளை ஆற்றுகின்றனர்.

மறைமாவட்டத்தில் ஆயர்களின் அருள் பணியில் அவர்களுடன் நெருங்கி உழைப்பவர்கள்: இணை ஆயர்கள், துணை ஆயர்கள் குருகுல முதல்வர்கள், ஆயர் - பதிலாளிகள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர். ஆயர்கள் தங்கள் மக்கள் நடுவில் தொண்டுள்ளம் கொண்ட பணியாளர்களாகவும், ஆன்மீக அக்கறை கொண்ட நல்ல ஆயர்களாகவும் உண்மையான தந்தையர்களாகவும் திகழ அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பிறகு அருட்பணியிலும், நிருவாகப் பொறுப்பிலும் பொதுநிலையினருடைய பங்கு அதிகமாக வலியுறுத்தப்படுகின்றது.

**பங்கேற்பு அமைப்புக்கள் .....**

இவ்வாறு திருச்சபையின் இயல்பிலும், அமைப்பிலும் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் ஆவியானவரின் வெவ்வேறான கொடைகள், கூட்டுப்பொறுப்பு, உரையாடல், பணிப்பகிர்வு போன்ற சங்கத்தின் கொள்கைகளைச் செயல் படுத்துவதற்குத் திருச்சபைச் சட்டம் பல வழிமுறைகளை வகுத்துள்ளது. அவற்றில் முக்கியமானவை பொதுநிலையினரும் பங்கேற்கும் ஆலோசனைக் குழுக்களாகும்.

திருச்சபை என்பது ஓர் இயக்கம். வெறும் நிறுவன அமைப்பு அன்று. கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு, தூய ஆவியின் துணையாலும், தூண்டுதலாலும் வழிநடத்தப்படும் மக்கள் இயக்கம். இயேசு தொடங்கி வைத்த இறையாட்சியின் அடையாளமாகவும் அதைச் செயல் படுத்தும் கருவியாகவும் விளங்கும் இறைமக்கள் இயக்கம்.

திருச்சபையின் உறுப்பினர் எல்லோரும் சிறப்பான முறையில் "இறைமக்கள்" என அழைக்கப்பெறுகின்றனர். இது அவர்களது அழைப்பு - மாண்பு. இதன் பொருட்டு இயேசுவின் நற்செய்தியைப் பறைசாற்றி இறையாட்சியை நிறுவி நிலைநாட்டும் பணியாளர் ஆகின்றனர். இது இவர்களது பொறுப்பு - கடமை. இந்த அடிப்படையில் ஏற்றத்தாழ்வு பாராட்டாது, இணைந்து செயற்படத் திருந்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவருக்கும் கடமை உண்டு. பொதுநிலையினரை விளிம்புக்குத் தள்ளிவிட்டுத் திரு ஆட்சியாளர் மட்டும் மையத்தில் இருந்து கொண்டு ஆட்சி புரிவதும், பொதுநிலையினரை ஆட்டிப் படைத்து அவர்கள் மீது அதிகாரம் செலுத்துவதும் கூடாது. மாறாக, பொதுநிலையினரை இறையாட்சிப் பணியாளர்களாக ஏற்று, உடனுழைப்பாளர்களாக மதித்து, கூட்டுச் செயற்பாட்டில் இறங்க வேண்டும் என்பதை இரண்டாம் வத்திக்கான் சங்கம் வலியுறுத்துகிறது (காண்: திருச்சபை 37).

இவ்விதமாகப் பணிகளைச் சீராகத் திட்டமிட - சிறப்பாகச் செயல்பட - சீரிய முறையில் மதிப்பிட, இன்னபிற செயல்முறைகளைத் திறம்பட ஆற்றிட சிறிய குழுக்களால்தான் இயலும். ஆதலின் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை பின்வரும் பணிக்கு குழுக்களாக எல்லா மறைமாவட்டங்களிலும் செயல்பட பணித்துள்ளது.

1. திருநூல்
2. திருவழிபாடு
3. மறைக்கல்வி
4. கிறிஸ்தவக் கல்வி
5. நற்செய்தி அறிவிப்பு
6. பிற மறைகளோடு உரையாடல் / கிறிஸ்தவ ஒன்றிப்பு
7. சமூகத் தொடர்பு
8. பொதுநிலையினர்
9. இளைஞர் பணி
10. குடும்ப நலன்
11. சமூகப் பணி
12. இடம்பெயர்ந்தோர்

இதே பணிக் குழுக்கள் பங்குகள் ரீதியாகவும் அமைக்கப்பட்டிருத்தல் சிறந்தது. பங்களவில் பணிக்குழுக்கள் அமைந்தால் பொதுநிலையினர் பலருடைய ஈடுபாட்டைப் பெறவும், வளர்க்கவும் பணிபுரியத் தூண்டவும் அது துணை செய்யும். பங்கின் பன்முக வளர்ச்சிக்கு உதவுவதோடு மறைமாவட்டத்தோடு மக்களுக்குள்ள தொடர்பையும் அது வலுப்படுத்தும்.

**பொதுநிலையினர் என்பவர்கள் ......**


பொதுநிலையினர் மறைமாவட்டத்திலும் பங்குச் சமூகங்களிலும் தங்களின் கடமைகளையும், பொறுப்புக்களையும், அவர்கள் திருமுழுக்கினால் பெற்ற அழைப்புக்கேற்ப ஆக்கபூர்வமான விதத்தில் ஆற்ற வேண்டும். "மறைமாவட்டத்திலும், பங்கு சமூகத்திலும் - அருள்பணியாளர்களுக்கும், பொதுநிலையினருக்குமிடையே உள்ளம் கவர்ந்த உரையாடல் மூலம் திருச்சபைக்குப் பல நன்மைகள் உண்டாகும்" எனச் சங்கம் கூறுகிறது (திருச்சபை 37). ஆதலால் அருள்பணியாளர்களும், பொதுநிலையினரும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொண்டு தனி மனித மதிப்பையும், மனித மாண்பையும் போற்ற வேண்டும். கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கான தகுந்த சூழலை உருவாக்க வேண்டும். எவ்வித அச்சமின்றி, முற்சார்பு எண்ணமின்றி உரையாடல் நடைபெற வேண்டும்.

"சமுதாயத்தில் வாழும் பொதுநிலையினர் அதன் எல்லாத் துறைகளிலும் முழுமையாகப் பங்கேற்று அதில் புளிப்பு மாவு போல் செயற்படுவதே" அவர்கள் பெற்றுள்ள அழைப்பு. "பொது நிலையினரின் தனி இயல்பு உலகைச் சார்ந்திருக்கும் பண்பு" எனச் சங்கம் உரைக்கிறது. அதுதான் பொதுநிலையினருக்கு உரியதும் தனிப்பட்ட விதத்தில் அவர்களைச் சார்ந்ததுமாகும்" (திருச்சபை 31). உலகைச் சார்ந்திருக்கும் பண்பு திருச்சபைக்கே உரிய பங்கு. ஏனெனில் திருச்சபை இருப்பதும், இயங்குவதும், பணியாற்றுவதும் உலகில்தான். இயேசுவின் இலட்சியமாகிய இறையாட்சிக்கு ஏற்றவாறு உலகின் அமைப்புக்களை மாற்றியமைப்பதில் பொதுநிலையினர் முனைந்து ஈடுபட வேண்டும். உலகியல் அமைப்பைப்

புதுப்பிப்பதைப் பொதுநிலையினர் தமக்கே உரிய கடமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் (பொதுநிலையினரின் திருத்தூதுப் பணி 7).

**முடிவாக .....**

குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவது போல் திருச்சபை அமைப்புக்குள் மட்டுமே அமிழ்ந்து, அதன் நிர்வாகப் பொறுப்புகளிலும் பிரச்சினைகளிலும் மட்டுமே மூழ்கிக் கிடக்காமல் பொதுநிலையினர் தங்களின் விழிகளை அகலவிரித்துச் சமுதாயத்தை ஊடுருவி நோக்கி அதை இயேசு விரும்பும் புதிய சமுதாயமாக உருமாற்ற வேண்டும். ஏனெனில் என்று பொதுநிலையினர் இயேசுவின் சீடர்களாக இறையாட்சி உருவாக்கத்துக்கான அறைகூவலைத் துணிவோடு ஏற்று, ஆன்மீக - சமூக - அரசியல் தளங்களில் ஈடுபாட்டுடன் பங்கேற்கிறார்களோ அன்றுதான் பொது நிலையினரின் பொற்காலம் உண்மையிலேயே புலரும். ■





# படைப்புழுவாம் துயர் துடைப்போம்!

என்ன இது "படைப்புழுவாம்"! எங்குமிதால் துன்பம்
ஏழை விவசாய மக்கள் ஏங்கித் தவிக்கின்றார்
செந்நெல் வயல் சோளனோடு தேசப் பயிரனைத்தும்
சேதமுறத் தேடியழித் தேநிதமும் நாசமுறப்பண்ணி
துன்பமதை விளைவித்து துயர்ப்பரிசை நமக்களித்து
துள்ளுமிதன் ஆட்டமதை நிறுத்தவழி இலையா?
என்றேங்கும் ஏழையுழைப் பாளர் துயர் மாற்ற உடன் அரசார்
எடுக்குஞ் செயற்பாட்டுக்கு இணைந்து துணை புரிவோம்!

பக்கவிளைவற்ற புழுநாசினியை வாங்கி
பக்குவமாய்த் தெளிகருவி கொண்டு தெளித்தழிப்போம்
மக்களெலாம் ஒன்றுபட்டுணர்ந்து செயற்பட்டால்
மாற்றமது நம்மண்ணில் மலர்ந்து மகிழ்வளிக்கும்
துக்கம் போய்த் துயர் விலகிச் சுகம் வந்து கூட
சோர்வகற்றி மனவொன்றிச் செயற்படுவோம் கூடி
ஐக்கியமாய் ஒன்றுபட்டுச் செயற்பட்டால் எந்த
அரக்கனையும் அழித்திடலாம் நாட்டில் நலம் செழிக்க

பயிர் வளரும் வயல் தோட்டம், சேனை, புலலெங்கும்
பறந்துணவு தேடிவரும் நற்பறவைக் கூட்டம்
அயல் உறவாம் புறா, மைனா, கிளி பறவை இனத்தை
அடியோடு தொலைத்துவிட முயல்வதனை விடுத்து
துயரழிக்கும் துணைவரென ஆதரவு காட்டின்
துன்பந்தலும் புழு பூச்சி இனத்தை உணவாக்கிப்
பயனளிக்கும் பறவைகளால் வயல் செழிக்கும் பாரீர்
பழக்கமிதை வழக்கமெனக் கொண்டுயர்வோம் நாமே!

பொலபொலவென பொழுது விடியத் துவங்கியிருந்தது. நேற்றைய குளிர் இன்னும் காற்றில் மிச்சமிருந்தது. என் கால்மாட்டில்,

'டாக்டரய்யா.... டாக்டரய்யா...' என்று பலவீனமான குரல் கேட்டுக் கொண்டிருந்தது. ஏதோ புதிதாய் உயிர்த்தெழுந்தவன் போல் சட்டென்று கண்விழித்தேன். எதிரில் 60 வயது மதிக்கத்தக்க ஒரு பெரியவர் நின்றுகொண்டிருந்தார். இத்தனை குளிரிலும் வெறும் மேலோடு, இடுப்பில் மடித்துக் கட்டிய ஒரு அழுக்கு வேட்டியும், தலையில் சம்பிரதாயத்திற்கு ஒரு ஈரிலைத்துண்டில் உருமாலைக் கட்டுமாய் பரிதாபமாகக் காட்சியளித்தார்.

"என்னங்க வேணும்?"

"ஐயா, எம்பட பண்டமொன்று பிரசவத்தில் துடிக்குதுங்க. ரெண்டாவது ஆட்டம் உடறப்பவே பனிக்கொடம் சரிஞ்சிருச்சுங்க. கன்னுக்குட்டியோட ஒத்தைக்கால் மட்டும் வெளியே தெரியுது. மாடு பிராணன் போறாப்பல முக்குதுங்க... படிச்ச டாக்டர் வந்திருக்கிறீங்கன்னு சொன்னாங்க, அதான் கூட்டிட்டுப் போலாமுன்னு வந்தனுங்க..."

என்னை அழைக்க வந்திருக்கிறார் என்பதை விடவும், இந்த நாட்டுப்புறத்து ஆசாமி என்னை படித்த டாக்டரென்று தெரிந்து வைத்திருப்பது மகிழ்ச்சியளித்தது. சட்டென்று முகத்தைக் கழுவிக் கொண்டு கிளம்பினேன்.

"கனகு வர்றதுக்கு நேரமாகும். எனக்கு வழி தெரியாது. உங்க சைக்கிள இங்கேயே நிறுத்தீட்டு, எங்கூட பைக்கில வந்துருங்க. அப்புறம் வந்து சைக்கிள எடுத்துக்கலாம்."

"சரீங்கய்யா..."

அந்தப் பெரியவர் தனது புராதன காலத்து பச்சை நிற நார்டன் சைக்கிளை ஓரமாக நிறுத்திப் பூட்டினார். பூட்டும்போது கவனித்தேன். பூட்டு மட்டும் புதுசு. என் மருந்துப் பெட்டியை ஒரு பொக்கிஷம் போல் மடியில் வைத்தபடி, என் பின்னால் வெகு ஜாக்கிரதையாய் அமர்ந்து கொண்டார். முதலில் வண்டியை கடைவீதி வழியே விடச் சொன்னார். இந்த ஊரின் கடைவீதி என்பது ஊருக்குள் தென்வடக்கில் செல்லும் சாலையின் இருமருங்கிலும் வரிசையாய் தாழ்வாரம் இறக்கி அமைக்கப்பட்ட சின்னச்சின்ன கடைகளைக் கொண்டதுதான். இந்த அதிகாலை நேரத்திற்கு டீக்கடைகளில் மட்டுமே கூட்டம் மிகுந்திருந்தது. எல்லாம் விவசாயக் கூலியாட்கள். இவர்களில் பலர் ஒரே சமயத்தில் இரண்டு டீ வாங்கிக் குடிப்பார்களாம்.

கடைவீதி தாண்டியதும் பெரியவர் சுடுகாட்டுப் பாதையில் வண்டியைத் திருப்பச் சொன்னார். இருபுறமும் வயல் வெளிகள் என்பதால் குளிர்காற்று ஊசியாய் குத்திற்று. பெரியவரின் பக்குவப்பட்ட தோலுக்கு இந்தக் குளிர் தோற்றுப் போயிருக்க வேண்டும். எவ்விதமான சலனமுமின்றி அமர்ந்திருந்தார். ஒரு வழியாக ஒரு சிற்றோடையைக் கடந்தவுடன் சொன்னார்.

"அந்தப் பாடை திருப்பி மூலை தாண்டி இருக்கிற ஒத்தப்பனை கிட்ட வண்டியப் போட்ருலாமுங்க... அதுக்கப்புறம் கைத்தடம் தாடாத்தியா இருக்காது. பொறவு வந்து வண்டிய எடுத்துக்கலாம்"

வண்டியை ஓரங்கட்டிவிட்டு இருவரும் ஒரு பெரிய குளம் போன்ற குழிக்குள் இறங்கி மேலேறினோம். அதன்பின் பனஞ்சாரியை ஒட்டி நீண்ட வரப்பில் நடக்கலானோம்.

"இதென்ன இவ்ளோ பெரிய குழி?"

"காலஞ்செழிச்சப்ப மண்ணுல



# நாடு வைத்தியர்

வெளஞ்சத வெச்சு பொழச்சமுங்க... முந்துன பெரு வறட்சியில ஏகம்பேர் மண்ண வித்துத்தான் கஞ்ச குடிச்சானுங்க. இந்தக் காட்டுக்காரன் எம்பங்காளிதா. செங்கல்லறுக்க மண்ண வித்துப்புட்டான்... இப்போ கிணத்துல தண்ணி வந்தும் பிரயோசனமில்ல...''

வரப்புவழி நீண்டு கொண்டிருந்தது. பனித்துளி அணிந்த புற்கள் கால்களைச் சிலிர்ப்பூட்டின. மொந்தையாய் இருந்த பதவுகள் பயமுறுத்தின. பெரியவர் ஏதோ தார்ச்சாலையில் நடப்பதுபோல் வேகமாய் முன்னே சென்று கொண்டிருந்தார்.

''என்னங்க, தடம் முடிஞ்ச பாட்ட காணாம்?''

''இதா... நாலு மாரு போனா எம்பட கொட்டாயி வந்துருமுங்க. பொம்பள பாவம், வெசனத்தோட பார்த்திருப்பா. கொஞ்சம் வெரசா நடங்கய்யா...''

இரட்டைக் கோப்பு வைத்து பனங்கருக்கு வேய்ந்த கொட்டகை. உள்ளே ஒரு தொங்கிப்போன கயிற்றுக் கட்டில். கவலை தோய்ந்த முகத்தோடு பெரியவரின் மனைவியும், கோவணம் மட்டுமே கட்டிய ஆளுக்காரச் சிறுவனும் எங்கள் வரவுக்காக காத்திருந்தனர். முன்புற வெட்டவெளியில் ஒரு காங்கயம் மாடு நான்கு கால்களையும் ஒரே திசையில் நீட்டி, பக்கவாட்டில் படுத்துக்கொண்டு பிரசவ வேதனையில் துடித்துக் கொண்டிருந்தது. அதன் பின்புறத்தில் பனிக்குடம் வெளியேறியதால் செம்மண் சகதியாகி விட்டிருந்தது. நான் கையுறைகள் அணிந்துகொண்டு மாட்டை அணுகினேன்.

கன்னுக் குட்டியின் ஒற்றைக்கால் வெளியே நீட்டியிருக்க, தலை அதன் மார்புப் பகுதியை நோக்கி குப்புறத் திரும்பியிருந்தது. கழுத்தின் மேற்பகுதி ஒரு திண்டுபோல் இடமே இல்லாத வகையில் அடைத்திருந்தது. பெரியவர் எரவானத்திலிருந்து எடுத்துக் கொடுத்த கயிற்றுச் சுருளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, வெளியில் நீட்டியிருந்த காலில் சிறுகுளம்பிற்கு மேல் உருவாஞ்சுருக்கு வைத்துக் கட்டினேன். இந்தக் காலை மீண்டும் உள்ளே தள்ளிவிட்டு, என் இடதுகையால் கன்றின் கீழ்த்தாடையை இழுத்துக் கொண்டு, வலதுகையால் கழுத்துப் பகுதியை பலம் கொண்ட மட்டும் உள்ளே தள்ளினேன். இந்தப் பகீரத முயற்சியில் தலை நேராகத் திரும்பிற்று. இப்போது உள்ளே விசாலமாய் இடம் கிடைத்தது. மடங்கிக் கிடந்த மற்றொரு முன்னங்காலிலும் அதே மாதிரி கயிற்றைக் கட்டினேன். பிறகு இரு கைகளாலும் கன்றுக் குட்டியின் தலையைப் பிடித்துக் கொண்டு, பெரியவரையும், வேலைக்காரச் சிறுவனையும் ஆளுக்கொரு கயிறை மெதுவாக இழுக்கச் சொன்னேன். பிரசவம் துவங்கிற்று!

பிறந்த காளைக்கன்று சற்று புசுஷ்டியாகவே இருந்தது. பெரியவர் அதன் நாசித் துவாரங்க ளிலிருந்த சளிக்குழம்பை அகற்றிவிட்டு, அதன் காதுகளில் மூச்சுப்பிடித்து ஊதினார். கன்றுக்குட்டி சிலிர்த்து தலையாட்டியது. பின் தாய்ப் பசுவிற்குப் போட வேண்டிய ஊசி மருந்துகளைப் போட்டவுடன், அது எழுந்து தன் செல்லக் கன்றுக் குட்டியை ஆர்வத்தோடு நக்க ஆரம்பித்தது.

பெரியவர் மூன்று நூறு ரூபாய் நோட்டுகளை என்னிடம் கொடுத்துவிட்டு, பயபக்தியோடு கையெடுத்துக் கும்பிட்டார். அந்தக் கிழவி தன் புகையிலைக் கறை படிந்த பற்கள் தெரிய சிரித்தாள். இப்படி ஒரு கிராமத்திற்கு நான்கு மாடுகளுக்கு சிகிச்சையளித்து விட்டால் மக்கள் என்னைப் புரிந்து கொள்வார்கள். கூடவே அந்த இளங்கோ வைத்தியரின் கொட்டமும் அடங்கிப் போகுமென்று நினைத்துக் கொண்டேன்.

மறுபடி இருவரும் ஒற்றைப் பனையை நோக்கி நடக்கத் துவங்கினோம். இப்போது முன்பிருந்த அவசரமில்லை. சாவகாசமாக ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தோம். அதற்குள் கனகு வந்துவிட்டிருந்தான். வாசல் பெருக்கி சுத்தப்படுத்தி பக்கெட்டில் தண்ணீர் எடுத்து வைத்து தயாராகக் காத்திருந்தான். அந்தப் பெரியவர் என்னிடம் சொல்லிக் கொண்டு தனது சைக்கிளை எடுக்கச் சென்றார். நான் உள்ளே சென்று சட்டையை மாற்றிக்கொண்டு திரும்புகையில், அந்தப் பெரியவர் கனகுவிடம் ஏதோ சிரித்துப் பேசிவிட்டுச் செல்வதைப் பார்த்தேன்.

''என்ன கனகு... இந்தப் பெரியவரை ஏற்கனவே உனக்குத் தெரியுமா?''

''என்னங்கய்யா இப்படிக் கேக்கிறீங்க... உங்ககிட்டே அவரு ஒண்ணுமே சொல்லலீங்களா..?''

''ஒண்ணும் சொல்லல கனகு...''

''இவருதானுங்க அந்த இளங்கோ வைத்தியரு!''

– நிறைவு.

■ சென்னிமலை கோவிந்தராஜ்

# தாய்மையின் தனிமை

## கவிதையில் ஓர் கதை


■ ரஜனி சஸ்பெரான்

உன் தந்தை இறந்ததும், இருக்குமுன்னை வளர்க்க
ஐயைந்து ஆண்டுகளாய், நெருப்பும் புகையும் திண்டு
ஐஸ்வர்யமாய் உன்னை வளர்க்க, சிறுகச் சிறுகச் சிதைந்தேனடா
ஆளாகிய நீயும் ஒரு பெண்ணை விரும்ப
ஆசைப்பட்டதை நிறைவேற்ற, உறவுகளை வெறுத்தேனடா
ஆடம்பரமாய் திருமணமும் செய்து வைத்தேனடா.

நோயின் மிகுதியால் உடலும் நலிந்து, பெலனற்று,
நொவும் கூட, அவதியுற்றேன் பல மாதமடா
அள்ளி அணைத்திட வந்தேன் உன் பிள்ளையை
தள்ளி நில்லு, தொடாதே என் பிள்ளையை என்று
மல்லுக் கட்டிய உன் மனைவியை
துள்ளி எழுந்து எதிர்ப்பாய் என நினைத்தேன் – ஐயோ
தூரம் நின்று மௌனித்தது ஏனடா?
எட்டு மாதமாகியும் என் பிள்ளையை பார்க்கவரவில்லை
என்றென்றும் தேவையில்லை உன் உறவு என்று
என்னைக் கணக்கெடுக்க மாட்டேன் என்ற மனைவியை
எட்டி நின்று வேடிக்கை பார்த்த நீயும்
என்னுள்ளத்தில் உதைக்காமல் உதைத்தது ஏனடா.

நேரில் நின்று பேசும் தெய்வம் பெற்றதாய் என்றும்
அன்னை ஓர் ஆலயம் என்றும்
அன்னையைப் போல் ஒரு தெய்வம் இல்லை என்றும்
அம்மான்னா சும்மா இல்ல அவ இல்லன்னா யாருமில்ல என்றும்
ஆசைப்பட்டாலும் காசிருந்தா வாங்கமுடியா அம்மாவ என்றும்
அன்னையின் காலடியே சொர்க்கம் என்றும்
தெய்வம் வீட்டில் இருக்கிறதென்றா அது தாயடா என்றும்
நூறாயிரம் தத்துவங்களால் தாய்மையை போற்றினாலும்
நூற்றாண்டு காலமாக தாய்மார்களின் மறுபக்கம் இதுதானேடா
கடனும் நோயும் மிஞ்ச சருகு போல் சுருண்டு தளர்ந்து
தனிமையில் இறைவனைப் பற்றி மரியன்னையின் துணை நாடி
தயவுடன் நீடுழிகாலம் நலம்வாழ பிள்ளையுனக்காய் பிரார்த்தித்து
தாயவள் நான் சாவுக்காய் காத்துக் கிடக்கிறேனடா.

நான் பெற்ற துன்பம் பெற்றோராகிய நீங்களும்
நாளை உங்கள் பிள்ளையால் பெறக்கூடாது என்று
நாள்தோறும் கடவுளிடம் பிரார்த்தனை செய்யடா
மகனே! நான் தாங்கிய வலி வேதனையை
நீ பெற்றாயானால் நான் துடிதுடித்துப் போவேனடா
உன் குடும்பம் நலம்வாழ எதையும் தாங்குவேனடா.





## கிறிஸ்தவம்

# மாணவர் பக்கம்

கூறாத உயர்தரம்

- நில்மினி கஜேந்திரன் -

### கல்வித்துறையில் இலங்கைத் திருச்சபையின் பங்களிப்பு:

கல்வித் துறையில் மிஷன் பாடசாலைகளுக்கு பாராபட்சம் காட்டப்பட்டாலும், மிஷன் பாடசாலைகளால் இலங்கை கல்வித்துறைக்கு கிடைத்த நன்மைகளை நாம் மறக்க முடியாது. எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் இவை பெரும் பங்களிப்புச் செய்திருக்கின்றன. கல்வியினை மாணவருக்கு வழங்க அரசாங்கம் இயலாதிருந்த நிலைகளில் அவர்கள் முன்வந்து ஆற்றிய சேவைகள் பாராட்டுதற்குரியதாகும்.

இலங்கையின் பல பாகங்களிலும் பல பாடசாலைகளை அமைத்து ஐரோப்பாவிலிருந்து பல ஆசிரியர்களை வரவழைத்து மாணவர்களுக்கு கல்வியினை வழங்கினர். இவற்றுள் அமெரிக்க மிஷன் சபை யாழ்ப்பாணத்தில் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது. ஏனைய மாணவர்களிலும் பார்க்க அதிகமான பாடசாலைகள் இங்கு அமைக்கப்பட்டு ஐரோப்பாவிலிருந்து சிறந்த கல்விமான்களை வரவழைத்து மாணவர்களுக்கு கல்வியினை வழங்கியமை போற்றத்தக்கது. இதனாலேயே யாழ் மக்கள் தாம் பெற்ற கல்வியினை இன்றும் தம் பிள்ளைகளுக்கு வழங்கி வருகின்றனர்.

ஆங்கிலம் உத்தியோக மொழியாக்கப்பட்டதுடன் அரசரோடு தொடர்பு கொள்ள, அரச உத்தியோகங்களைப் பெற இலங்கை மக்கள் ஆங்கிலம் கற்கவேண்டிய தேவையும் ஏற்பட்டது. இதனால் ஆரம்பத்தில் அங்கிலிக்கன் சபையினரும், இதனைத் தொடர்ந்து பிரித்தானிய பிரஜைகளாகிய ஏனைய புரட்டஸ்தாந்து சபையினரும் ஆங்கிலப் பாடசாலைகளை அமைத்து கல்வியூட்டினர். இவர்களுக்கு அரசிடம் இருந்து நிதியுதவிகளும் கிடைத்தன.

இத்தகைய சூழ்நிலையிலேயே 1856ல் வணபிதா கிறிஸ்தோபர் பொன்ஜீன் அடிகளார் இலங்கைக்கு வந்து யாழ்ப்பாணத்தில் பணிபுரிய அனுப்பப்பட்டார். இவர் ஒரு பிரெஞ்சுக்காரராய் இருந்தாலும், இலங்கை வருமுன் 10 ஆண்டுகள் இந்தியாவில் பணிபுரிந்தார். இக்காலத்தில் தமிழையும் ஆங்கிலத்தையும் நன்று கற்றறிந்தார். இலங்கை கத்தோலிக்க மதத்தின் கல்வி நிலையினைக் கருத்தில் கொண்ட அடிகளாருக்கு இக்கல்வி முறை சற்றும் திருப்தி அளிக்கவில்லை. இருப்பினும் 4 ஆண்டுகள் இக்கல்வி முறையை நன்றாக ஆராய்ந்து 1860ல் "இலங்கைக் கத்தோலிக்க கல்வியைப் பற்றிய ஒரு சில வார்த்தைகள்" எனும் சிறு நூலை வெளியிட்டார். இதில் மத்திய பாடசாலை ஆணைக்குழுவின் பாராபட்ச முறையை வெளிப்படுத்தி கல்வி பற்றிய கத்தோலிக்கரின் நிலைப்பாட்டை தெளிவாய் எடுத்துக்கூறி, தம் பிள்ளைகளின் கல்வி மட்டில் கத்தோலிக்க பெற்றோரின் பொறுப்புணர்ச்சியைத் தூண்டிவிட்டார். ஒவ்வொருவருக்குமுள்ள மதச் சுதந்திரத்தைக் குறிப்பிட்டு, பெற்றோர் பிள்ளைகளின் கல்வியைத் தெரிவுசெய்யும் சுதந்திரமுடையவர்கள் என்பதைக் கூறி வாதாடினார். இந்நூலே ஒரு கத்தோலிக்க குருவால் வெளியிடப்பட்ட முதல் ஆங்கில நூலாகும். மற்றும் அனைத்து கிறிஸ்தவ பிரிவினருக்கும் பொதுவான ஒரு கிறிஸ்தவத்தைக் கற்பிக்கும் அரச கல்வி முறையை எதிர்த்துப் பல கட்டுரைகளை எழுதினார். இதில் பிரபல்யமானது 'Examiner" எனும் பத்திரிகையாகும். 1865ல் சட்டசபை ஒன்று உருவாக்க பொன்ஜீன் அடிகளாரிடம் ஆலோசனை பெறப்பட்டது. அனைத்து மதத்தினரும் சமமாக நடத்தப்பட வேண்டுமென வாதாடினார். பின்னர் இது "கத்தோலிக்க திருச்சபையும் சீர்திருத்தமும்" எனும் பெயரில் புத்தகமாய் வெளியிடப்பட்டது. மேலும் இவரின் ஆலோசனைகளைக் கொண்டு 1869ல் மத்திய பாடசாலை ஆணைக்குழுவை ரத்துச் செய்து, "பொதுக்கல்வித் திணைக்களம்" ஒன்றை ஏற்படுத்தி புதுக் கல்வித் திட்டம் அமுல் செய்யப்பட்டது. அரச நன்கொடைகளுடன் சுதேச மதப் பாடசாலைகளை ஆரம்பித்து, வர்த்தகம் விஞ்ஞானம் பாடத்துடன் சேர்க்கப்பட்டது. சிறந்த மாணவர்களுக்கு புலமைப் பரிசுகள் வழங்கப்பட்டன. கல்கத்தா, இங்கிலாந்து சர்வ கலாசாலைகளுக்கு மாணவர்கள் அனுப்பப்பட்டனர். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் அமைக்கப்பட்டன. இதன் விளைவாக கத்தோலிக்கருக்கு மட்டுமல்லாது ........

தொடர்ச்சி 15ம் பக்.....

# வெற்றியின் இரகசியம் எறும்பைப்போல இருப்பதே!



ஜெ.எச்.இரத்தினராஜா

**நாம்** எப்பொழுதும் நம்மைவிட புகழிலும், செல்வத்திலும் உயர்நிலைகளில் இருப்பவர்களைப் பார்த்து நாம் உயர்வதற்கு உண்டான வழிமுறைகளைக் கற்றுக்கொள்ள முயல்கிறோம். சில சமயங்களில் நமக்குக் கீழே இருப்பவர்களின் முயற்சியையும், சுறுசுறுப்பையும் கவனிக்கத் தவறிவிடுகின்றோம். சில நேரங்களில் நம் வாழ்க்கையில் நம்மைச் சுற்றியுள்ள சாமான்ய மக்களிடமிருந்தும், சாதாரண நிகழ்வுகளிலிருந்தும் பாடங்களைக் கற்றுக்கொள்கிறோம். கற்றுக்கொள்ள வேண்டும்.



ஆசான் ஜிம் ரோன் (Motivational Guru Jim Rohn) வாழ்வில் முன்னேற ஊக்கமளிக்கும் எறும்புகள் தத்துவம் (Ants philosophy) என்று நான்கு செய்திகளைப் பாடங்களாக எடுத்துச் சொல்கிறார். அச்செய்திகள் இதோ....

1. ***முயற்சியை விட்டுவிடாதே:*** எறும்புகளைப் பாருங்கள். எப்பொழுதாவது முயற்சியை விட்டுவிடுகின்றனவா? அவைகள் செல்லும் வழியில் தடங்கலை ஏற்படுத்திப் பாருங்கள். முட்டி மோதி தடம்மாறி மேலே செல்ல முயற்சிக்கும். முயற்சியைக் கைவிடுவதில்லை. திகைத்து நின்று திரும்பிப் போவதுமில்லை. இதுபோல நம் வாழ்விலும் பல நேரங்களில் நினைத்த காரியங்கள், நினைத்தவுடன் நடக்காமல் தடங்கல் ஏற்படலாம். துவளாமல் அவற்றை சவாலாக எடுத்து, மாற்று வழியை ஆராய்ந்து முயற்சி செய்யுங்கள். வெற்றி நிச்சயம். முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சிலும் இதையே ‘விடாதே, விட்டு விடாதே’ என்று தாரக மந்திரமாகச் சொன்னார்.

2. ***துணிந்து செல்:*** எறும்புக்கும், வெட்டுக்கிளிக்கும் இடையே நடந்த ஒரு சுவாரஸ்யமான கதையை நாம் இங்கே நினைவில் கொள்ளவேண்டும். எறும்புகள் எதிர்வரும் குளிர் காலத்தை மனதில் வைத்து கோடை காலத்தில் சுறுசுறுப்பாக தானியங்களை சேமிக்கின்றன. ஆனால், வெட்டுக்கிளிகள் சோம்பேறிகளாகத் துள்ளித் திரிகின்றன. கோடை காலம் வெகுநாட்களுக்கு நீடிக்காது என்று எறும்புகளுக்குத் தெரியும். நாம் நன்றாக, செல்வாக்காக இருக்கும்பொழுது எதிர்காலத்தில் இடர்வராது என்று இறுமாப்பாய் இருக்காதே. எல்லோரிடமும் அன்பாய் இரு. சில சந்தர்ப்பங்களில் நேரம் சரியில்லாவிட்டாலும், நல்ல நண்பர்கள் துன்பம் வரும் நேரத்தில் கை கொடுப்பார்கள்.


3. ***நம்பிக்கை வை:*** எறும்புகள் தாங்க முடியாத குளிர் காலத்தில் எதிர்வரும் கோடை காலத்தை மனதில் வைத்து பொறுமையா

கக் காத்திருக்கும் கோடை காலம் வந்ததும் மீண்டும் சுறுசுறுப்பாக வெளிக்கிளம்பி தானியங்கள் சேகரிக்க ஆரம்பித்துவிடும். அதுபோல துன்பம் வரும் வேளையில் துவண்டு விடாமல் பொறுத்திரு... காத்திரு... தீராத பிரச்சினையென்று எதுவுமில்லை. அதற்கு பிறருக்கு தீங்கு நினையாத நல்ல மனம் வேண்டும். நல்லது நடக்கும் என்று நம்பி, காத்திருந்து முயற்சித்தால் எதிர் காலம் வளமாக அமையும்.

4. **உன்னால் முடிந்ததெல்லாம் செய்:** ஒவ்வொரு எறும்பும் எவ்வளவு தானியத்தை சேமித்துவிட முடியும்? எறும்புகள் ஒன்றுடன் ஒன்று போட்டியிடுவதில்லை. மற்ற எறும்புகள் சமமாக உழைக்கவில்லையே! நான் மட்டும் ஏன் தொடர்ந்து உழைத்து சேகரிக்க வேண்டும் என்று சோம்பி இருப்பதில்லை. உழைப்பதற்கு கூலி குறைவென்றும் சலித்துக் கொள்வதில்லை. எனவே, உன்னால் முடிந்ததெல்லாம் செய். நூற்றுக்கு நூறு வீதம் நல்ல மனதுடன் உழைத்தால் மகிழ்ச்சியும் வெற்றியும் நிச்சயம்.

ஒன்று தெரியுமா? எறும்புகள் தன் எடையைப்போல இருபது மடங்கு கனமான பொருட்களைத் தூக்கிச்செல்ல முடியும்.

எனவே, அடுத்த முறை நம்மால் முடியாது என்று நினைக்கும் போது மிரண்டு விடாதே. சிறிய எறும்புகளை நினைத்துப் பார். உன் தோள்களின் சுமை எளிதாகும். ■



அறிஞர்கள் வாழ்வில் நகைச்சுவை!

அறிஞர் பெர்னார்ட் ஷாவும், வின்ஸ்டன் சர்ச்சிலும் எப்போதும் தமது கௌரவத்தை விட்டுக் கொடுக்காதவர்கள். ஒரு சமயம் அறிஞர் பெர்னார்ட்ஷா வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு கடிதம் அனுப்பியிருந்தார் இப்படி:

**"இன்று ஒரு பெரிய விழாவில் நான் உரையாற்றவிருக்கிறேன். நீங்கள் உங்கள் நண்பர்களோடு வந்து கலந்துகொள்ளுங்கள் - அப்படி யாராவது உங்களுக்கு இருந்தால்."**

அதற்கு சர்ச்சில் அனுப்பிய பதில்:

**"இன்று எனக்கு வேறு ஒரு முக்கியமான நிகழ்ச்சி இருக்கிறது. உங்களது அடுத்த நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறேன் - இனிமேல் அப்படி ஏதும் நடந்தால்."**



## ஆயிரம் முறை தோல்வியுற்ற எடிசன்!

*கண்டுபிடிப்புகளின் மன்னன் தோமஸ் ஆல்வா எடிசன் என்பதை நாம் அறிவோம். ஆனால் அவர் எத்தனை முறை தோல்வி அடைந்தார் என்பதை அறிந்தால் நாம், வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகளைக் கண்டு அஞ்சமாட்டோம். ஒவ்வொரு தோல்வியும் ஒரு பாடம் கற்பிக்கிறது. நாம் எப்படிச் செய்யக்கூடாது என்பதை மனதில் ஆழப்பதிக்கிறது. இதோ எடிசன் வாழ்வில்,*

*எடிசன் ஒரு முறை ஸ்டோரேஜ் பாட்டரி கண்டுபிடிப்பதில் வெற்றி பெற்றார். அவருடைய உதவியாளருக்கு ஒரே வியப்பு.*

*'அட, இந்த ஆசாமி கூட ஒன்றைக் கடைசியில் கண்டு பிடித்து விட்டானே!' என்று.*

*அவர் உதவியாளர் முகத்தில் ஆச்சரியக் குறி பளிச்சிடுவதைக் கண்ட எடிசன் சொன்னார்: "ஏய், என்ன வியக்கிறாய்? இது நான் கண்டுபிடித்தவற்றில் முதலாவது இல்லை. 50,000 முறைகள் எப்படி செய்யக்கூடாது என்றும் கண்டுபிடித்து இருக்கிறேன் தெரிந்துகொள்!" என்றார்.*

*தோல்வியே வெற்றிக்கு முதற்படி!.*



# யார் ஏழை ...?

ஒரு பணக்கார அம்மா துணி கடைக்குப் போய் கடைக்காரரிடம், "எனது மகனுக்குத் திருமணம். ஆகவே எனது வீட்டில் வேலைசெய்யும் பணிப்பெண்ணிற்கு கொடுக்க மிகக் குறைந்த விலையில் ஒரு சேலை கொடுங்கள்" என்று வாங்கிச் செல்கிறார்.

சற்று நேரத்திற்குப் பிறகு அதே கடைக்கு அந்த வீட்டுப் பணிப்பெண் வருகிறார். கடைக்காரரிடம், "என் முதலாளியின் பையனுக்குக் கல்யாணம். அதனால் எனது முதலாளி அம்மாவுக்குப் பரிசாகக் கொடுப்பதற்கு உங்கள் கடையில் மிக உயர்ந்த விலையுடைய சேலைகளை எடுத்துப்போடுங்கள்" என்று பார்த்து மிக உயர்ந்த விலையுடைய ஒரு சேலையை வாங்கிச் செல்கிறார்.

இதில் யார் பணக்காரர்...??

திரி ஸ்டார் ஹோட்டலில் தங்கி இருக்கும் சுற்றுலாவிற்கு வந்த ஒரு பணக்கார வீட்டு 6 மாத குழந்தையின் தாய், ஹோட்டல் மேலாளரிடம் குழந்தைக்கு ஒரு கப் பால் வேண்டும் என்று கேட்கிறார்,

அதற்கு அந்த மேலாளர், "பாலுக்கு நீங்கள் தனியாக பணம் செலுத்த வேண்டும்" என்று கூற, பணக்கார அம்மாவும் பணத்தைச் செலுத்தி பாலை வாங்கிக் குழந்தைக்கு ஊட்டுகிறார்.

ஒருநாள் சுற்றிப் பார்த்துவிட்டு, ஹோட்டலுக்கு திரும்பும் வழியில் குழந்தை பசியால் அழுததால், ரோட்டின் ஓரத்தில் இருந்த தேநீர் கடையில் ஒரு கோப்பை பால் வாங்கி குழந்தைக்கு ஊட்டினார். பிறகு "பால் எவ்வளவு" என்று கடைக்காரரிடம் கேட்க,

கடைக்காரப் பெரியவர், "குழந்தைக்குக் கொடுக்கும் பாலுக்கு நாங்கள் காசு வாங்குவதில்லை" என்று சிரித்த முகத்தோடு பதில் அளித்தார்...

பணம் உள்ளவர் எல்லாம் பணக்காரர் அல்ல. அதை கொடுக்க நினைப்பனே உண்மையான பணக்காரன்.

இந்த உலகத்தில் நிறைய நல்ல மனிதர்கள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். நம் கண்களுக்கு தென்படவில்லை என்றாலும் பரவாயில்லை நாம் அவர்களில் ஒருவராக இருக்க முயற்சி செய்வோம்.....

**இறக்கத்தான் பிறந்தோம்**
**அதுவரை இரக்கத்தோடு**
**இருப்போம்!**






# உதவி செய்யாமல் வாழாதே!

N.R. ரிஸ்கன்

உதவி என்னும் குணம் நிறைந்து காணப்பட்ட ஓர் சமூக கூட்டம்: ஒற்றுமையாக வாழ்ந்த உறவினர்கள்: இவர்களை மையப்படுத்திய காலம்தான் ஆரம்ப காலமாகும். அக்காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து வாழ்ந்தார்கள். கருத்து முரண்பாடு, இனம், மதம், சாதி என்ற வர்க்க வேறுபாடு நிலவாத காலம் அக்காலமாகும். துன்பப்படுவோர்களைத் தேடிச்சென்று ஆறுதல்படுத்திய கைகள், அன்பு செய்த உள்ளங்கள், வாசலில் உதவி கேட்டு வருபவர்களுக்கு இல்லை என்று சொல்லாத வாய்ச்சொற்கள் இச் செயற்பாடுகளே அம்மனித சமூகத்தில் அன்றாட வாழ்க்கையாக இருந்தன. இவ்வாறானவர்களை ஒரு காகத்திற்கு வர்ணித்துக் கூறலாம். ஏனென்றால் அது எங்கேயாவது உணவைக் கண்டால், தான் மட்டும் உண்பது சரியல்ல என்று நினைத்து மற்ற காகங்களையும் தன் குரலொலியால் கூப்பிட்டு, அதோடு சேர்ந்து சாப்பிடுவதை நாம் கண்டிருக்கின்றோம். அதனால்தான் இந்த காகத்தை அம்மனிதர்களுக்கு ஒப்பிட்டுக் கூறினேன். ஆனால், இத்தகைய மனிதர்களை இன்றைய காலத்தில் காண்பது மிக அரிது. ஏன்?

இன்று தொழிநுட்ப வளர்ச்சி கூடுதலான நாடுகளில் பின்பற்றப்படுவதால் மனிதர்களின் கண்முன்னே ஒருவரின் வேதனை, துன்பங்கள், தனக்கு ஏதாவது உதவி செய்யுங்கள் என்ற மக்களின் குரல் தென்படுவதில்லை. உதாரணமாக, அரசியல்வாதிகளைக் குறிப்பிடலாம். இன்றுள்ள அனேக மனிதர்களுக்கோ எப்போது விடியும் Facebook, Viber, Imo, Internet பார்ப்பதற்கு என்ற சிந்தனை, நான் மட்டும் சந்தோஷமாக வாழ்ந்தால் போதும் என்னும் ஆதங்கம் இவைதான் மனிதர்களுக்கு முன் தென்படுகின்றன. அத்தோடு இவை மனிதர்களின் தேவைகளில் முக்கியமான ஒன்றாக மாறிவிட்டன. இதற்கான காரணம் தொழிநுட்ப வளர்ச்சி. ஏன் இப்படியான மாற்றங்கள்? ஆரம்பத்தில் வாழ்ந்த வாழ்க்கை இன்று வாழமுடியாதா? அன்று உதவி செய்த நபர்களை இன்று காணமுடியாதா? விருப்பத்தோடு உதவி செய்த உள்ளங்கள் ஆனால் இன்று கட்டாயத்திற்காக உதவி செய்கின்றார்கள். மீண்டும் ஏன் இப்படியான மாற்றம் என பல்வேறுபட்ட கேள்விகள் என்னுள் எழுகின்றன. இதற்கான விடையை நீங்களே அறிந்து கொள்ளுங்கள்.

"உதவி" என்பது உன் தர்மத்தை பிறருக்காக விட்டுக்கொடு. மாறாக, பிறர் தர்மம் உனக்கல்ல என்பது என் கருத்தாகும். இவ்வுலகில் நாம் பிறக்கும்போதே உதவி என்கிற வரமும் கூட சேர்ந்து பிறக்கின்றது. ஆனால் இவ்வரத்தை பெரும்பாலும் மனிதர்கள் அனுபவிப்பது குறைவு. ஆனாலும் சில மனிதர்கள் தங்களது வாழ்க்கையை வாழாது பிறரது வாழ்க்கையில் பங்கெடுத்துக்கொள்வது வரவேற்கத்தக்க விடயமாகும். நாம் தினமும் மூவேளையும் உணவு உட்கொள்கின்றோம். எதற்காக? உடல்

ஆரோக்கியமாக இருப்பதற்காகவும், சுறு சுறுப்பாக வேலை செய்வதற்காகவும். அன்றாட தேவையாக ஏன் மாற்றிக்கொள்ளவில்லை? என்ன காரணம்?

குறிப்பாக உதவி செய்வதற்கு பணம்தான் இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. உங்கள் ஆறுதலான வார்த்தையோ, ஒருவரைப் பார்த்து பொறாமைப்படாமல் இருப்போதோ அல்லது விட்டுக்கொடுக்கும் மனதோ இதில் ஏதாவது ஒன்று இருந்தாலே நீங்கள் உதவி செய்வது வெளிப்படும். இவைதான் உங்கள் அன்றாட வாழ்வில் இருக்க வேண்டும் என்று கூறினேன். நாம் தினசரி வாழ்வில் தொலைக் காட்சி, வானொலி, பத்திரிகைகள் போன்ற வற்றில் மக்கள் துன்பப்படுவதை பார்த்தி ருக்கின்றோம். கையேந்தி நின்று உதவி கேட்பார்கள். அவர்களுக்கு ஏதாவது உதவி செய்திருக்கின்றோமா? நான் ஏற்கெனவே கூறியது போல் பணம் அவசியமில்லை. ஆனால் ஒரு நாளாவது அவர்களுக்காக பிரார்த்தனை செய்திருக்கலாமே! அதுவே நீ செய்த பெரிய உதவியாகக் கருதப்படும்.

உதவி செய்வதற்கு இனம், மதம், சாதி என்பன பார்க்காதே! அவ்வாறு பார்த்தால் உனக்கு உதவி செய்ய விருப்பம் இருக்காது. மற்றும் இவ்வுலகத்தில் பலதரப்பட்ட சாதனைகள் பல மனிதர்களால் படைக்கப்பட்டு வருகின்றன. இச்சாதனைகள் காலத்துக்கேற்ப வேறொரு நபராலும் படைக்கப்படலாம். அத்துடன் இது நிரந்தரமல்ல. ஆனால் தன்னுடைய வாழ்க்கையே பிறருக்காகத் தியாகம் செய்தல், இன்றைய காலத்தில் சாதனையாக பார்க்கப்படுவதோடு எக்காலத்திற்கும் மாற்றமடையாது. குறிப்பாக, சாதனையாளராக வரவேண்டும் என்பதற்காக உதவி செய்யாதீர்கள். அவ்வாறு செய்தால் அது உதவியல்ல. மாறாக, அது உனக்குரிய கௌரவமாக மாத்திரமே இருக்கும்.

இனிமேலாவது உங்கள் வாழ்க்கையில் முடிந்தளவு பிறருக்கு உதவுங்கள். அவர்கள் வாழும் வாழ்க்கையைப் பார்த்து ஏளனம் செய்யாதீர்கள். அந்த வாழ்க்கையை உங்களால் மாற்ற முடியுமா? சந்தோசம் என்ற உணர்வு அவர்களுடைய வாழ்க்கையில் மட்டுந்தான் நீடித்திருக்கும். பிறருக்காக வாழுங்கள். அவர்க ளுடைய வாழ்க்கையை உங்கள் வாழ்க்கையாக நினையுங்கள். "உதவுங்கள்; உதவி மூலம் சந்தோசம் அடைவீர்கள்".

இறுதியாக, உன் வாழ்க்கையில் ஒருவருக் காவது உதவி செய்யாமல் இவ்வுலகைவிட்டுப் போகாதே!. இதுவொரு மிகப் பெரிய குற்றம். ஒருநாளாவது பிறருக்காக வாழ்ந்திருக்கிறேன் என்ற சந்தோசத்தோடு கண்ணை மூடு!

உனக்காக வாழாதே!
பிறருக்காக வாழு!
பிறர் உயிரை உன் உயிராய் நினை!

## அறிவோம்!




கிட்னியில் கல் இருக்கிறதா? சாப்பாட்டில் மக்னீசியம் சேருங்கள். நிறைய பீன்ஸ் சாப்பிட்டாலே போதும். கோதுமை, ஓட்ஸ், பாதாம், முந்திரி, மீன், பார்லி போன்றவையெல்லாம் மக்னீசியம் அதிகம் உள்ள சில உணவுகள். காய்கறிகளை நிறைய சாப்பிடுபவர்களுக்கு, "கிட்னியில் கல்" என்ற பயமே தேவையில்லை.



– மாணவர் பக்கம் ....

அமைக்கப்பட்டன. இதன் விளைவாக கத்தோலிக் கருக்கு மட்டுமல்லாது ஏனைய மதத்தினருக்கும் பாடசாலைகளை அமைக்கும் உரிமை வழங்கப்பட்டது. வண பொன்ஜீன் அடிகளாரின் அயராத உழைப்பினால் இலங்கையில் அரச உதவி பெறும் பாடசாலைகளின் முறை (Denomination School System) உருவாகியது. இதனாலேயே அடிகளாரை அனைவரும் 'அரச உதவி பெறும் மதப் பாடசாலைகளின் தந்தை" என அழைத்தார். இவ்வாறு இலங்கை கல்வி வளர்ச்சியில் திருச்சபையின் பணி அளவிட முடியாததாகும்.



அருட்பணி அ. அ. நவரெத்தினம் (நவாஜி)
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.



அண்மையில் முழு இலங்கையரையும் அதிர்ச்சிக்குள்ளாகிய சம்பவங்களிலொன்று ஓர் இளம் தாயும், இரண்டு அவர்களது பிள்ளைகளும் ஓடும் புகையிரத்தின் முன்பாக பாய்ந்து தற்கொலை செய்து கொண்டமையாகும். இச்சம்பவமானது கடந்த 14.06.2019இல் கொழும்பு மாத்தறை புகையிரத மார்க்கத்தில் நடந்தேறியுள்ளது. அச்சம்பவத்தில் கொழும்பிலிருந்து அளுத்கம நோக்கிப் பயணித்த புகையிரத்தில் கொள்ளுப்பிட்டிக்கும் பம்பலப் பிட்டிக்கும் இடைப்பட்ட பகுதியில் கொழும்பு கொட்டாஞ்சேனையில் வசித்துவந்த திருமதி. ஜெனிட்டா தர்ஷினி இராமைய்யா என்கின்ற 35 வயது நிரம்பிய இளம் தாயும், அவரின் எட்டு மற்றும் பத்து வயதுகள் நிரம்பிய இரண்டு ஆண் பிள்ளைகளும் ஓடும் புகையிரதத்தின் முன்பாகப் பாய்ந்து தற்கொலை செய்துள்ளார்கள். இறந்த அவர்களது உடலங்கள் எடுக்கப்பட்ட இடத்திற்கு அருகில் காணப்பட்ட கடிதத்தில் 'எங்களுக்கு வாழ்வதற்கு வழியில்லை' (வறுமையும், நோயும்) என்று எழுதப்பட்டிருந்தது. இத்தகைய அதிர்ச்சியூட்டும் சம்பவமானது ஒரு பக்கத்தில் அனைவருக்கும் கவலையைக் கொண்டு வருகின்றது, மறுபக்கத்தில் வறுமையின் கோரமுகத்தினை தெளிவாகப் படம் பிடித்துக் காண்பிக்கின்றது.

நாட்டின் தலைநகரில் வாழ்கின்ற

# கொடிது கொடிது வறுமை கொடிது!

குடும்பத்திற்கே வாழ்வின் சவால்களைத் தாக்குப்பிடிக்க முடியவில்லையென்றால், ஏனைய பிரதேசங்களில், குறிப்பாக பின்தங்கிய, வறுமை தலைவிரித்தாடுகின்ற, போரினால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலுள்ள குடும்பங்களின் நிலை என்னவாகும் என்று எண்ணிப்பார்க்க முடியாமலுள்ளது. இச்சம்பவத்தை உற்றுநோக்குகின்றபோது, நாட்டிலுள்ள அரசினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வறுமை ஒழிப்புத் திட்டங்கள் எல்லாம் உண்மையானவைதானா? அவை உரிய பயனாளிகளை சென்றடைகின்றவா? அல்லது பெருச்சாளிகளின் வயிற்றை நிரப்புவதற்கு பயன்படுகின்றனவா? என்று கேட்கத் தூண்டுகின்றன. 1995ஆம் ஆண்டுக்கு முன்னதாக 'ஜனசவிய' என்கின்ற நிகழ்ச்சித் திட்டமும் தொடர்ந்து 1995ஆம் ஆண்டு முதல் இன்றுவரை 'சமூர்த்தி' நிகழ்ச்சித் திட்டமும் ஏழை மக்களின் வாழ்வில் ஒளியேற்றும் வண்ணம் ஆரம்பிக்கப்பட்டவையாகும். இந்நிகழ்ச்சித்

திட்டங்கள் யாவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின்கீழ் செயற்படுத்தப்படுகின்றன. இந் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 1.5 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் பயன்பெறுவதாக கூறப்படு கின்றது. அப்படி இந்நிகழ்ச்சித்திட்டம் செயற் படுத்தப்படுமாயின் எவ்வாறு இத்தகைய மரணங் கள் ஏற்படமுடியும் என்கின்ற கேள்வி எழாம லில்லை.

'கொடிது கொடிது வறுமை கொடிது அதனினும் கொடிது இளமையில் வறுமை' என்கின்றார் தமிழ்ப்பாட்டி அவ்வையார். இங்கு 'வாழ்வதற்கு வழியில்லை' என்றுகூறி மரணித்த பெண் இளம்வயதுடையவர். தாங்க முடியாத வறுமையினாலும், நோயினாலும் அவரும் அவரது குடும்பமும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்பது அவர் இறப்பதற்குமுன் எழுதிய கடிதத்தி லிருந்து தெரிய வந்துள்ளது. உலகம் பூராகவும் ஐப்பசி 17ஆம் நாள் 'உலக வறுமை ஒழிப்பு' நாளாக நினைவுகூரப்படுகின்றது. அத்தினம் நமக்கு தெளிவாக எடுத்துரைக்கும் செய்தி யாதெனில் வறுமையினால் பிரபஞ்சம் நாளும் வாடுகின்றது என்பதாகும். 1987ஆம் ஆண்டில் இந்நாளை ஆரம்பித்துவைத்த பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த ஜோசப் ரென்சிக்கி என்பவர் 'ஏதாவது ஓர் இடத்தில் வறுமையில் யாராவது பாதிக்கப்பட்டால் அவர்களது மனித உரிமை மீறப்படுகிறது' என்கிறார். இத்தினமானது பசி, வறுமை, வன்முறை,. பயம் போன்ற காரணி களால் பலியானவர்களை கௌரவிக்கும் வண்ணம் பாரிஸ் நகரில் ஆரம்பிக்கப்பட்டது. அதனை ஐக்கிய நாடுகள் பேரவையும் ஏற்று ஐப்பசி 17ஆம் நாளை 'உலக வறுமை ஒழிப்பு' தினமாக அதிகாரபூர்வமாக ஏற்றது.

எது வறுமை என்று நோக்கின், உண வின்மை மட்டும் வறுமையல்ல. கல்வியின்மை, உடை, உறைவிடமின்மை, வேலையின்மை, சுகாதாரமின்மை, சமூக ஏற்றத்தாழ்வு, உரிய வருவானமின்மை, போதிய சத்துணவுமின்மை, கைவிடப்பட்ட ஆதரவற்ற நிலை என்று வறுமைக்குப் பல பரிமாணங்கள் உண்டு. பொதுவாக சமூகத்தால் உணரப்படக்கூடிய அடிப்படை மனித உரிமை இழப்பே வறுமை எனலாம். வறுமையினால் பலியாகும் அல்லது வாடுகின்ற சின்னஞ் சிறுசுகள் என்றவுடன் நமது மனக் கண்களுக்கு வருவதெல்லாம் ஆபிரிக்க நாடுகள்தான். ஆயினும் நமது நாட் டிலும் இத்தகைய நிலையினால் பாதிக்கப் பட்டுள்ள பல குழந்தைகளையும் சிறார்களை யும் நம்மால் அவதானிக்க முடியும். இன்று பாடசாலையிலிருந்து இடைவிலகிச் செல்கின்ற பிள்ளைகளின் நிலைக்கான காரணத்தை அலசி ஆராய்ந்து பார்த்தால் அங்கு மேலோங்கி நிற்பது வறுமையாகும். வறுமையின் காரண மாக சிறார்கள் தொழிலுக்கு அமர்த்தப்படு வதையும், வீதியோரங்களில் நின்று சுய தொழிலில் ஈடுபடுவதனையும் நம்மால் நாளாந் தம் அவதானிக்க முடிகின்றது. போதிய உணவின்மை, அவ்வாறு உணவிருந்தாலும் அவர்களது வாழ்வின் வளர்ச்சிக்கான சத்துண வின்மை போன்ற காரணிகள் நம்மை அதிர்ச்சி யில் உறையச் செய்கின்றன. இலங்கைத் திரு நாட்டில் வறுமையினால் பீடிக்கப்பட்டுள்ள மாவட்டங்களுள் மட்டக்களப்பு முதன்மை இடத்திலிருப்பது நம் எல்லோருக்கும் மகிழ்ச்சி தருவதாக அமையாது.

வறுமை உலகினை ஆட்டிப்படைக்கின்ற பயங்கரங்களுள் ஒன்றாகும். உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு ஆண்டும் எட்டு மில்லி யன் சிறார்கள் வறுமையின் காரணமாக மரணிக்கின்றார்கள். ஒவ்வொரு நிமிடமும் பதினான்கு பேர் வறுமையின் காரணமாக மரணிக்கின்றார்கள் என்று தரவுகள் சுட்டிக் காட்டுகின்றன. அமைதியாகவிருந்து கொல் கின்ற வறுமை, பட்டினி போன்றவை தடுக் கப் படக்கூடிய நோயாகும். உலகில் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்கின்ற 1.4 பில்லியன் மக்களில் 36 வீதமானவர்கள் தென்னாசி யாவில் வாழ்கின்றார்கள் என்பது கசப்பான உண்மையாகும். அந்தவகையில் வறுமை தென்னாசியாவின் பிரதான சவால்களுள் ஒன்றாகும். இலங்கை நாட்டினைப் பொறுத்த வரைக்கும் 1990/91களில் 26.1 வீதமாகக் காணப்பட்ட வறுமை நிலை 2013 ஆம் ஆண்டில் 6.3 வீதமாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதென்று அரச தரவுகள் கூறுகின்றன. இவ்வாறு வறுமை வீதம் நாட்டில் .......

– தொடர் 19ம் பக்...



# மூன்றாம் தவணை எதிர்நோக்கு முன்னோடிப் பரீட்சை

தரம் : 11 பகுதி – I   கத்தோலிக்கத் திருமறை   நேரம்: 3 மணித்தியாலங்கள்

போதகர் S. அருமைராஜா (Dip.in.Chr (India))

**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக :**

**27. ஒரு சந்தியின் நோக்கங்களாவன :**
1. தான தருமம் செய்தல் ஆகும்
2. தவமிருத்தல் ஆகும்
3. உணவு உண்ணாது இருத்தல்
4. உடலை கட்டுப்படுத்தல்

**28. ஒரு சந்தி பிடிப்பதன் வயதெல்லைச் சட்டமானது :**
1. 18-60 வரை  2. 16-65 வரை  3. 12-60 வரை  4. 10-70 வரை

**பாடம் - 22**

**29. இறை மனித உரையாடலிற்காக இயேசு எமக்கு அளித்த முழுமையான எடுத்துக்காட்டு :**
1. இயேசுவின் பாடுகள்
2. இயேசு கற்பித்த செபம்
3. இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனை
4. இயேசு இரத்த வியர்வை சிந்தியது

**30. இயேசு கற்பித்த செபத்தை த் நற்செய்திகளில் குறிப்பிட்டோர் :**
1. தூய லூக்கா, தூய மத்தேயு
2. மத்தேயு, மாற்கு
3. மாற்கு, யோவான்
4. லூக்கா, மாற்கு

**31. புகழ்ச்சிக்குரிய வாழ்த்துக்கள் மூன்றும், ஆன்மீக தேவைகளை அடிப்படையாகக் கொண்ட வேண்டுதல்கள் நான்கும் அடங்கியுள்ள செபம் எது?**
1. மூவேளைச் செபம்
2. இயேசு கற்பித்த செபம்
3. உன்னத குருவின் செபம்
4. விசுவாசப் பிரமாணம்

**32. செபத்தின் மூலம் கேட்பது தவறாது கிடைக்கும் என்னும் நம்பிக்கையுடன் செய்யும் நம்பிக்கை அறிக்கை யாது?**
1. அல்லேலூயா
2. மகிமை உண்டாவதாக
3. ஆமென்
4. விசுவாசப் பிரமாணம்

**33. இயேசு கற்பித்த செபத்தில் முக்கியமானது :**
1. கைகளை உயர்த்தி இறைவனை வேண்டுவதாகும்
2. திருப்பலி வேளை மட்டும் சொல்லுவது
3. இடைவிடாது சொல்லுதல் ஆகும்
4. சீடர்களுக்குக் கற்பித்துக் கொடுத்ததாகும்

**34. இயேசு கற்பித்த செபத்தின் பண்புகள் :**
1. 2  2. 4  3. 5  4. 6 ஆகும்

**பாடம் - 22**

**35. 3ம் நூற்றாண்டிலிருந்து மனனம் செய்து பயன்படுத்தப்பட்டு வந்த மரியன்னை நோக்கி சொல்லப்பட்டு வரும் செபம் யாது:**
1. சருவேசுரனுடைய பரிசுத்த மாதாவே
2. மங்களவார்த்தை செபம்
3. கிருபை தயாபர செபம்
4. மூவேளைச் செபம்

**36. மரியன்னையின் விண்ணேற்பு திருவிழாவானது?**
1. புரட்டாதி 08  2. ஆவணி 15  3. மார்கழி 08  4. மாசி 02

**37. மரியாவின் அமல உற்பவத் திருவிழா :**
1. மார்கழி 08  2. புரட்டாதி 08  3. வைகாசி 31  4. ஆவணி 15

**38. இயேசு சிலுவையடியில் தம் தாயை எந்த சீடனிடம் ஒப்படைத்தார் :**
1. பேதுரு  2. யாக்கோபு  3. யோவான்  4. பவுல்

**39. மரியன்னையின் இவ்வுலக வாழ்வின் இறுதியில் இறைவன் அவரை :**

1. உடலோடு விண்ணகத்திற்கு எடுத்துக்கொண்டார்
2. ஆன்மாவோடு விண்ணகத்திற்கு எடுத்துக்கொண்டார்
3. ஆன்ம உடலோடு விண்ணகத்திற்கு எடுத்துக்கொண்டார்
4. ஆன்ம உடலோடு விண்ணேற்றம் அடைந்தார்.

**40. இறை அன்னை பாத்திமா நகரில் மூன்று சிறுவர்களுக்கு காட்சியளித்த அச்சிறுவர்கள் யாவர் :**

1. லூசியா, ஜசிந்தா, பிரான்சிஸ்கோ
2. டொமினிக் சேவியோ, ஜசிந்தா
3. லூசியா, டொமினிக் சேவியோ, ஜசிந்தா
4. பெர்னதேத், லூசியா, ஜசிந்தா

**41. கி.பி. 1858 மாசி மாதம் 11ம் திகதி பிரான்சிஸ் லூர்த்து நகரில் எந்த சிறுமிக்கு 18 முறை இறையன்னை காட்சிக் கொடுத்தார்?**

1. லூசியா 2. ஜசிந்தா 3. பிரான்சிஸ்கோ 4. பெர்ணதேத்

**42. செபமாலை என்பதன் ஆங்கிலச் சொல்:**

1. றோசரி 2. செயின் 3. பிறையர் 4. வேசிப்

**43. றோசரி என்பதன் இலத்தீன் சொல் :**

1. பிறையர் 2. றொசாரியும் 3. வேசிப் 4. கீலிங்

– விடைகள் 21ம் பக்...

– 17ம் பக். தொடர் ......

குறைக்கப்பட்டிருந்தாலும் மக்களின் வாழ்வில் விடிவு ஏற்பட்டுள்ளதா என்று நோக்கின் புரியாத புதிராகவே இருக்கின்றது. அரசின் வறுமையொழிப்பு செயற்திட்டங்கள் எல்லாம் அரசியல் மயப்படுத்தப்பட்டிருப்பதால் அங்கு அரசியல் கட்சிகளின் வாக்கு வங்கித் தேவை முன்னிலைப்படுத்தப்படுகின்றதே தவிர மக்களின் வாழ்வில் வசந்தத்தைக் கட்டியெழுப்புவதில் தவறி விடுகின்றது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

எனவே வளமுள்ள தேசத்தை கட்டியெழுப்ப வேண்டுமாயின் முதலில் அந்நாட்டிலிருந்து வறுமை விரட்டியடிக்கப்பட வேண்டும். 'ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை மாற்றுவார் ஆற்றலின்பின்' என்கிறார் திருவள்ளுவர். தவ வலிமை உடையவரின் வலிமை யாதெனில் பசியைப் பொறுத்துக் கொள்ளலாகும். அதுவும் அப்பசியை உணவு கொடுத்து மாற்றுகின்றவரின் ஆற்றலுக்கு பிற்பட்டதாகும். வாழ்வதற்கு வழியின்றி ஒருவர் இறந்து போகின்ற நிலையுள்ள நாட்டில் யாரும் நிம்மதியாகப் பெருமூச்சு விட முடியாது. வளமுள்ள, வலிமைமிக்க நாட்டினை கட்டியெழுப்ப வேண்டுமாயின் முதலில் வளமுள்ள மானிட சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். வளமுள்ள மானிட சமூகம் மலர வேண்டுமாயின் வறுமை என்கின்ற கொடிய அரக்கனிடமிருந்து விடுதலை பெறவேண்டும். 'வாழ்க்கையில் வறுமை என்பது ஒரு பாகம். ஆனால் அதுவே பலரது வாழ்வில் தீராத சோகம்.' இத்தீராத சோகத்தினை விரட்டிட வேண்டுமாயின் தாராளமாகக் கொடுக்க வேண்டும். 'பெறுவதிலும் பார்க்கத் தருவதில் உள்ள மகிழ்ச்சி மேலானது' தாராளமாகக் கொடுக்க ஒன்றுபடுவோம் தோழர்களே.

– மற்றுமோர் சிந்தனையுடன் ......



"நீ மற்றவர்களுக்கு உதவி
செய்யாத பட்சத்தில்,
மற்றவர்களிடமிருந்து உதவியை நீ
எதிர்பார்ப்பது நியாமில்லை"

- *மகாகவி பாரதியார்*

"ஊன், உறக்கம், இனப்பெருக்கம் ஆகிய இந்த மூன்றையும் அளவுகோளாக வைத்துப் பார்த்தால் எல்லா உயிரினங்களும் ஒரே வகையை சார்ந்ததாகவே கருதப்படும். ஆனால், மனித இனத்துக்கும் மற்ற உயிரினங்களுக்கும் உள்ள வித்தியாசம், மனிதன் தர்மத்தை கடைப்பிடிப்பிடிப்பதால் மற்றவர்களை காட்டிலும் உயர்ந்தவனாகக் கருதப்படுகிறான்"

- *ஹரித்ர மகரிஷி*

அரண்மனையை ஒட்டி வசித்த பிச்சைக்காரன் ஒருவன், அந்த அரண்மனைக் கதவில் ஒட்டப்பட்டிருந்த அறிவிப்பைக் கண்டான். அதில், மன்னர் விருந்தளிக்கப் போவதாகவும், அரச உடை அணிந்து வருவோர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. பிச்சைக்காரன், தான் அணிந்திருந்த கந்தல் உடைகளை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துக்கொண்டான். நிச்சயமாக அரசரும், அவருடைய குடும்பத்தினரும் மட்டுமே ராஜ உடை உடுத்திருக்க முடியும் என எண்ணினான். திடீரென அவனுக்குள் ஓர் எண்ணம். அந்த மாதிரி எண்ணுகிற அளவுக்கு தனக்குள் ஏற்பட்ட துணிச்சலைப் பற்றி யோசித்த போதே அவனுக்குள் நடுக்கம் ஏற்பட்டது. இருந்தாலும், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அரண்மனை வாசலை அடைந்தான். வாயிற்காவலனிடம்,

"ராஜாவைப் பார்க்க வேண்டும்" என்றான்

அந்தக் காவலன், அரசரிடம் அனுமதி வாங்கி வந்தான். உள்ளே வந்த பிச்சைக்காரனிடம்

"என்னைப் பார்க்கவேண்டும் என்றாயாமே..." என்றார் அரசர்.


"ஆமாம். நீங்கள் அளிக்கும் விருந்தில் கலந்து கொள்ள எனக்கும் ஆசை. ஆனால் என்னிடம் ராஜ உடைகள் இல்லை. என்னை அதிகப் பிரசங்கி என நினைக்காவிட்டால், உங்களது பழைய ஆடையை அளித்து உதவினால், அதனை அணிந்து கொண்டு விருந்துக்கு வருவேன்" என்றான் மிகவும் பவ்வியமாக. அதே நேரம் மன்னர் என்ன சொல்வாரோ என நடுங்கியபடி அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் மன்னர் அவனுக்கு ராஜ உடை ஒன்றை வழங் கினார். அந்த உடையை உடுத்திக் கொண்டவன், கண்ணாடி முன் நின்று கவனித்தான். தோற்றத்தில் கம்பீரம் மிளிர்வதைக் கண்டு வியந்தான். அப்போது மன்னர் அவனிடம்,

'விருந்தில் கலந்து கொள்வதற்குத் தகுதி உடையவனாகி விட்டாய். அதை விட, முக்கியமான ஒன்று இனி உனக்கு வேறெந்த உடையும் தேவைப்படாது. உன் ஆயுள் முழுவதும் இந்த உடை அப்படியே இருக்கும். துவைக்கவோ தூய்மைப்படுத்தவோ அவசியம் இருக்காது" என்றார்

கண்ணீர் மல்க, மன்னருக்கு நன்றி கூறி விட்டுக் கிளம்ப எத்தனித்தவன், மூலையில் கிடந்த தனது பழைய ஆடைகளைக் கவனித்தான். அவனது மனம் சற்றே சலனப்பட்டது, 'ஒருவேளை, அரசர் கூறியது தவறாக இருந்து இந்த உடைகள் கிழிந்து விட்டால், அப்போது நமக்குப் பழைய உடைகள் தேவைப்படுமே..?!' என யோசித்தவன், சட்டெனச் சென்று தன் பழைய உடைகளை வாரிக் கொண்டான்.

வீடு வாசல் இல்லாத அவனால், பழைய துணிகளை எங்கேயும் வைக்க முடியவில்லை. எங்கே போனாலும் பழைய ஆடைகளையும் சுமந்தே திரிந்தான். மன்னர் அளித்த இரவு விருந்தையும் அவனால் மகிழ்ச்சியாக ஏற்க முடியவில்லை. அடிக்கடி கீழே விழுந்து விடும் பழைய துணிகளைச் சேகரிக்கும் மும்முரத்தில் பரிமாறப்பட்ட பதார்த்தங்களைச் சரிவர உருசிக்க முடியவில்லை. அரசர் சொன்னது உண்மை என்பது நாளடைவில் அவனுக்குப் புரிந்தது. அவர் கொடுத்த ஆடை அழுக்காகவோ, கிழியவோ இல்லை. ஆனாலும், அந்த யாசகனுக்குப் பழைய உடைகள் மீது நாளுக்கு நாள் பிடிப்பு அதிகமானது. மக்களும் அவனது ராஜ உடையைக் கவனிக்காமல், அந்த கந்தல் மூட்டையையே பார்த்தனர். அவனைக் 'கந்தல் பொதி கிழவன்' என்றே அழைத்தனர்.

இறக்கும் தருணத்தில் இருந்த அவனைப் பார்க்க அரசர் வந்தார். அவனது தலை மாட்டில் இருந்த கந்தல்



மூட்டையைப் பார்த்து, அரசரின் முகம் சோகமாவதைக் கண்டான். ஆரம்பத்திலேயே அரசர் சொன்ன செய்தி நினைவுக்கு வந்தது. பழைய துணி மூட்டை அவனது வாழ்நாளின் மொத்த மகிழ்ச்சியையுமே பறித்து விட்டது. அந்த யாசகனிடம் மட்டுமல்ல, நம் எல்லோரிடமும் அப்படியொரு மூட்டை இருக்கிறது. அதனுள் விரோதம், கோபம், கவலை, சோகம், பகைமை... எனப் பல பெயர்களில் வேண்டாத பொருட்கள் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாப்பதிலேயே கவனம் செலுத்துவதால், நமது வாழ்வில் வீசுகின்ற மகிழ்ச்சித் தென்றலை நுகர முடியாமல் இருக்கிறோம். நம்முடைய தீராத கோபம், எத்தனை இன்பம் வந்தாலும், அதை ஏற்றுக்கொண்டு ஆனந்தப்பட முடியாமல் செய்து விடுகிறது. அரண்மனைகளில் கூட, இன்றும் பலர் பிச்சைக்காரர்களாகவே வாழ்கின்றனர். அனாதை ஆஸ்ரமங்களில் அரசர்களாக வாழ்வோரும் உண்டு.

மனதில் இருக்கிறது மகிழ்ச்சி. வாழ்க்கை தினமும் நமக்கு புதுத் துணிகளை நெய்து தருகிறது. நமக்கோ, பழைய துணிகளில் ஒரு நூலைத் தூக்கி எறியவும் மனமில்லை. நம் வீடுகளில், என்றோ வாங்கிய பல பொருட்கள் நிரம்பி இருக்கின்றன. அவற்றால் எந்தப் பயனும் இல்லாவிட்டாலும், தூக்கி எறிய மனமில்லை. வீட்டையே குடோனுக்கு இணையாக மாற்றி, குடித்தனம் நடத்துபவர்களும் இருக்கின்றனர். இல்லத்தை மட்டுமல்ல, உள்ளத்தையும் குடோனாக்கி பழைய சரக்குகளைப் பத்திரப்படுத்தினால் அவற்றின் அழுகல் நாற்றம் உதடுகளின் வழியே சொற்களாகவும், கரங்களின் வழியே செயல்களாகவும் வெளிப்பட்டு வேதனையையே விநியோகிக்கும். வெளிச்சத்தை வழங்காது.

மகிழ்ச்சியாக இருப்பதற்குக் காரணங்கள் தேவையே இல்லை! மகிழ்ச்சியாக இருப்போம்



நிலா தமிழின் தாசன்

## குறும்பா 35 அலைச்சல்

கேரளத்தில் கஞ்சாநல்ல விளைச்சல்
கேடிகளைத்தேடிக் கடலெங்கும் வளைச்சல்
பாரையொடு ஆரை வரும்
படகெங்கும் பார்சல்கள்!
ஆரைவிடும் பாவச்செயல் அலைச்சல்!

### மூன்றாம் தவணை எதிர்நோக்கு முன்னோடிப் பரீட்சை - பகுதி - I விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 27) 4 | 29) 2 | 31) 2 | 33) 1 | 35) 1 | 37) 1 | 39) 3 | 41) 4 | 43) 2 |
| 28) 1 | 30) 1 | 32) 3 | 34) 3 | 36) 2 | 38) 3 | 40) 1 | 42) 1 | |


வீச்சுக்கல்முனை புனித அன்னம்மாள் ஆலய

175வது ஆண்டு திருவிழா

கொடியேற்றம்
19
07
2019
வெள்ளிக்கிழமை



திருவிழா
28
07
2019
ஞாயிற்றுக்கிழமை


கூட்டுத் திருப்பலி தலைமை :
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்
மேதகு கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை

தினமும் மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலை,
மன்றாட்டு, திருப்பலி என்பன இடம்பெறும்.

வழமைபோல் அனைத்தும் நடைபெற ஏற்பாடுகள்
செய்யப்பட்டுள்ளன.

பங்குத்தந்தையும்,
பங்கு மேய்ப்புப் பணிச் சபையினரும்

# நான் ஏழையாய் இருந்தபோது...



உலக பணக்காரர் கம்ப்யூட்டர் உலகின் பேரரசன் பில்கேட்ஸிடம் ஒருவர் கேட்கிறார்,

"உங்களை விடப் பணக்காரர் யாராவது இருக்கிறாரா?"

"ஆம், ஒருவர் இருக்கிறார். பல ஆண்டுகளுக்கு முன்பு, நான் வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டேன். நியூயார்க் நகர விமான நிலையம் சென்றேன். அங்கு நாளிதழ்களின் தலைப்புச் செய்திகளைப் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது நாளிதழ் ஒன்றினை விரும்பி வாங்கலாம் என நினைத்தேன். ஆனால் என்னிடம் சில்லறை நாணயம் இல்லை. எனவே, அதை விடுத்தேன். அப்போது, ஒரு கருப்பினச் சிறுவன், என்னை அழைத்து, அந்த நாளிதழ் பிரதியைக் கொடுத்தான். என்னிடம் சில்லறை இல்லை எனக் கூறினேன். அவன் பரவாயில்லை, இலவசமாகக் கொடுக்கிறேன் என்றான்.

மூன்று மாதங்கள் கழித்து, நான் அங்கு சென்றேன். மறுபடியும், அதே கதை நடந்தது. அந்தச் சிறுவன் நாளிதளை இலவசமாகக் கொடுத்தான். ஆனால், நான் வாங்க மறுத்தேன். அவன், அவனுக்கு வந்த அன்றைய இலாபத்திலிருந்து தருவதாகக் கூறி கொடுத்தான்.

19 வருடங்கள் கழிந்தன. நான் பணக்காரன் ஆகிவிட்டேன். அந்தச் சிறுவனைக் காணும் ஆவல் எனக்கு வந்தது. ஒன்றரை மாதத் தேடுதலுக்குப் பின் அவனைக் கண்டு பிடித்தேன். அவனைக் கேட்டேன்.

"என்னைத் தெரிகிறதா?"

"தெரிகிறது. நீங்கள் புகழ் வாய்ந்த பில்கேட்ஸ்"

"பல வருடங்களுக்கு முன்னால், இரண்டு முறை நீ இலவசமாக நாளிதழ்களை எனக்கு வழங்கினாய். தற்போது அதற்காக, நீ என்னவெல்லாம் விடும்புகிறாயோ அவற்றைக் கைமாறாகத் தர விரும்புகிறேன்" என்றேன்.

"உங்களால் அதற்கு ஈடு செய்ய முடியாது" என்றான் அந்தக் கருப்பு இளைஞன்....

"ஏன்?" என்றேன் நான்.

அந்த இளைஞன்,

"நான் ஏழையாய் இருந்தபோது, உங்களுக்குக் கொடுத்தேன். ஆனால், நீங்கள் பணக்காரர் ஆன பின்னே எனக்குக் கொடுக்க வருகிறீர்கள். ஆகவே, நீங்கள் எவ்வாறு சரிக்கட்ட முடியும்???" என்றான்.

கருப்பு இளைஞன் தான் என்னை விடப் பணக்காரன் என்பதை உணர்ந்தேன்" என்றார் பில்கேட்ஸ்.


கொடுப்பதற்கு நீ பணக்காரனாக இருக்க வேண்டுமென்பதோ, பணக்காரன் ஆகும் வரை காத்திருக்க வேண்டும் என்பதோ கிடையாது. உதவ வேண்டும் என்ற குணத்திற்கு கால, நேரம் அல்லது ஏழை, பணக்காரன் என்பது கிடையாது

**அடுத்தவரை மகிழ்வித்து மகிழ்வோம்...**

"அன்பை விலை கொடுத்து வாங்க முடியாது. அது தகுதியானவர்களுக்கு இலவசமாகத் தரப்படுகிறது" - லாங்கேபெல்லோ

"ஆசையற்றவனே அகில உலகிலும் மிகப் பெரிய பணக்காரன்" - ரிஷிகேஷ் சிவானந்தர்

"பொருள் தானத்தை விட, அறிவு தானம் தான் சிறந்தது" - சாமுவேல் ஸ்மைல்ஸ்



# திருஅவைச் செய்திகள்

## கிறிஸ்தவர்கள் மற்றவர்களுக்கு ஓர் ஆசீராக முடியும்

**எ**ல்லையற்ற ஆற்றலைக் கொண்டுள்ள இறைவன், தன்னை ஒரு சிறு ரொட்டித் துண்டுக குள் அடக்கி வைத்திருப்பது, அவரது அன்பின் வெளிப்பாடு. மிகச்சிறியவற்றைக் கொண்டு மிகப் பெரும் விடயங்களை இயேசுவின் அன்பு சாதிக்கி றது என்பதை எடுத்துக்காட்டுவதாக திருநற் கருணை உள்ளது என உரைத்தார் திருத்தந்தை. பிறருக்கு உதவிச் செய்ய மறுத்து தனக்குள்ளேயே சுயநலவாதியாக வாழ்வதற்கு எதிரான மருந்தாக திருநற்கருணை உள்ளது எனவும் கூறிய திருத்தந்தை, ரொட்டியை பிட்டு பிறருடன் பகிரும் செயல், நாமும் பிறருக்கு நம்மையே வழங்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி நிற்கிறது என உரைத்தார்.

அன்பு மற்றும் அக்கறைக்காக மக்கள் பசியாய் இருத்தல், முதியோர் தனிமையில் வாழ்தல், குடும்பங்கள் சிரமங்களைச் சந்தித்தல் போன்ற சூழல்களில் இயேசு நம்மை நோக்கி, அவர்களுக்கு ஏதாவது உண்ணக் கொடுங்கள்" என்று கேட்கிறார் என தன் மறையுரையில் கூறினார் திருத்தந்தை.

திருப்பலியின் வழியாக ஆசீரைப் பெறும் கிறிஸ்த வர்கள், தாங்களும் மற்றவர்களுக்கு ஓர் ஆசீராக மாறமுடியும் என தன் மறையுரையில் மேலும் கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.



## புனித திருமுழுக்கு யோவான்...

**த**ன்னை மையப்படுத்தாமல், இயேசு என்ற மையத்தைச் சுட்டிக்காட்டுபவராகவும், தன் வளர்ச்சியைக் குறுக்கி, இயேசுவின் வளர்ச்சிக்கு வழிவிடுபவராகவும் வாழ்ந்தவர் திருமுழுக்கு யோவான்.

புனித யோவானின் எடுத்துக்காட்டு, நம் அனைவருக்கும் பெரும் பாடமாக உள்ளது, ஏனெனில், தன்னை மையப்படுத்தாமல், இயேசு என்ற மையத்தைச் சுட்டிக்காட்டுபவராகவும், வலிமையும், ஓங்கிய குரலும் தான் கொண்டிருந்தாலும், இறைவனுக்கு முன் அமைதி காப்பவராகவும், தன் வளர்ச்சியை குறுக்கி, இயேசுவின் வளர்ச்சிக்கு வழிவிடுபவராகவும் இருந்தார்

இயேசுவுக்குரிய பாதையை தயார் செய்து, அவரது பணிக்கென தன்னை அர்ப்பணித்த புனித யோவான், நம் ஒவ்வொருவரின் வாழ்வுக்கும் தூண்டுகோலாக உள்ளார் என்று கர்தினால் பெச்சு அவர்கள் தன் மறையுரையில் குறிப்பிட்டார்.

## பிறருக்கு இலவசமாகப் பணியாற்றுங்கள்....

கடவுளோடு நமக்குள்ள உறவு, முற்றிலும் இலவசமானது. எனவே, அவரின் அருளைப் பெறுவதற்கு, நம் இதயங் களைத் திறந்து வைத்திருக்க வேண்டியது அவசியம்.

கடவுள் உங்களை இலவசமாக அன்புகூர்வது போன்று, நீங்களும் பிறருக்கு இலவசமாகப் பணியாற்றுங்கள்.

விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது" எனப் பறை சாற்றுங்கள், நலம் குன்றியவர்களைக் குணமாக் குங்கள், இறந்தோரை உயிர் பெற்றெழச் செய்யுங்கள், தொழுநோயாளரை நலமாக்குங்கள் பேய்களை ஓட்டுங் கள் என்ற மறைப்பணியை, இயேசு நம்மிடம் ஏற்கனவே கொடுத்துள்ளார் என்றும், திருத்தந்தை கூறினார்.

கிறிஸ்தவ வாழ்வு என்பது, பணியாற்றுவதே என்றும், கிறிஸ்தவத்திற்கு மனம் மாறியவர்கள், துவக்கத்தில் இறைமக்களுக்குப் பணியாற்றுவதற்குத் திறந்த மனதுள்ளவர்களாய் இருந்து, நாளடைவில், இறைமக்களைப் பயன்படுத்தத் துவங்கிவிடும் நிலை வருத்தமளிக்கின்றது எனவும், திருத்தந்தை கூறினார்.



# 'அதிவிசேஷம்' ஆசுப்பத்திரியில்

**செ. அன்புராசா அடிகள்**

*அமைதித் தென்றல், முள்ளைத்தீவு,*

அதிர்வுகள் – 02

பப்பு என்ற 'பெருங் குடிமகன்' திடீரென மதுபானசாலை ஒன்றினுள் நுழைந்து புதிரான 'ஓடர்' ஒன்றினைக் கொடுத்தான். 'எனக்கு அரைக்கிலோ கோழித் தந்தூறி தாருங்கள்! அதேபோல் இங்குள்ள மற்ற ஒவ்வொருவருக்கம் அரைக்கிலோ கோழித் தந்தூறி கொடுக்க வேண்டும். காரணம், நான் சாப்பிடும் போது மற்றவர்களும் என்னைப் போலவே நன்றாகச் சாப்பிட வேண்டும்!" எனக்கூறி நின்றான். பாப்புவின் வேண்டுகை புதினமாக இருப்பினும், நிறைவேற்றப்பட்டது.

எல்லோரும் தந்தூறியைச் சாப்பிட்டு முடித்ததின் பின் பப்பு மீண்டும் ஒரு 'ஓடர்' கொடுத்தான்; "எனக்கு அரைப் போத்தல் சாராயம் அதிவிசேசம் தாருங்கள்!" என்றவன், "இங்குள்ள மற்ற ஒவ்வொருவருக்கும் அரைப் போத்தல் சாராயம் அதிவிசேசம் கொடுக்க வேண்டும்! காரணம், நான் குடிக்கும்போது மற்றவர்களும் என்னைப் போல நன்றாகக் குடித்து மகிழ வேண்டும்!" என்றான். அதுவும் அவ்வாறே செய்யப்பட்டது.

கூடியிருந்த 'பெருங்குடி மக்கள்' அத்தனை பேரும் பப்புவை புகழ்ந்து ஆர்ப்பரித்து ஆரவாரம் செய்து 'இவன் தான் மனிதன்!" என்று குரல் எழுப்பி கரகோஷம் செய்து தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.


குடித்து முடிந்து 'கிக்' ஏறியதும் பப்பு மூன்றாம் முறையாகச் சத்தமிட்டான்: "என்னுடைய பில்லை என்னிடம் தாருங்கள்! மற்ற ஒவ்வொருவருடைய பில்லினையும் அவரவரிடம் கொடுங்கள்! காரணம், சாப்பிட்டதற்கு நான் பணம் செலுத்துவது போல மற்றவர்களும் அவர்கள் சாப்பிட்டதற்கு பணம் செலுத்த வேண்டும்!" என்று சொல்லி முடிப்பதற்குள் கள நிலைமை கட்டுக்கடங்காமல் போனது! வேறென்ன? நடக்க வேண்டியதுதான் நடந்தது...!

தலை, கைகள், கால்கள் என பெரும்பாலும் உடற்பாகங்கள் முழுவதும் 'பன்டெஸ்' சுற்றப்பட்ட நிலையில், பப்பு, இப்போது மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் (ICU) அநுமதிக்கப்பட்டுள்ளார். தன்னைப்போல் மற்றவர்களை இவ்வளவாக அன்பு செய்யும் தனக்கு இப்படியாயிற்றே என்ற அதிர்ச்சியில் உறைந்துள்ளார் பப்பு! ■

## தொடக்கம் நாமாக இருப்போமே... !

பொதுநலம் என்பது புல்லாங்குழல் போன்றது. சுயநலம் என்பது கால்பந்து போன்றது. இவை இரண்டுமே காற்றால் இயங்குகின்றன. ஆனால் ஒன்று முத்தமிடப்படுகின்றது. மற்றொன்று உதைக்கப்படுகின்றது. தான் வாங்கிய காற்றை சுயமாக வைத்துக் கொள்வதால் கால்பந்து உதைபடுகிறது. ஆனால் தான் வாங்கிய காற்றை இசையாக புல்லாங்குழல் தருவதால் அது முத்தமிடப்படுகிறது.

**சுயநலம் உள்ள மனிதன் புறக்கனிக்கப் படுவான்.**
**பொதுநலம் உள்ளவன் போற்றப் படுவான்.**






**திருவிவிலியம் கற்போம், அறிவை வளர்ப்போம் : 191,**
பங்கு பற்றியோர் 15 பேர், இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதியவர் ஒருவர். ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதியோர் 12 பேர்.

## திருவிவிலியம் கற்போம் - 191 விடைகள்

நடுக்கத்துடன், தூய அப்பத்தை, நிகரானது, நுரை, ஒடுக்கப்பட்டோர், கிபயாவில், நோபில், உண்மையுள்ளவன், குருக்களை, அஞ்சாதே.

## அறிவை வளர்ப்போம் - 191 விடைகள்

1. பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள உண்மையான தூரம்
2. விக்ரமாதித்தியர்
3. 42.19 கிலோ மீற்றர்
4. AB இரத்தவகை
5. இரு
5. அன்மொழித்தொகை

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS

போட்டியின் இரு பிரிவுக்கும் சரியான விடைகளை எழுதி Iம் பிரிவில் 400/= பரிசு பெறுபவர்:

* **ஆன் இவாஞ்சலின் ஜான்சன்,**
இல. 19, 3ம் குறுக்கு,
மாமாங்கம்,
மட்டக்களப்பு.

போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி IIம் பிரிவில் 200/= பரிசு பெறுபவர்:

* I. சுரேஸ் மொறின் ஜெலோஷன்,
6/52, சொறிக்கல்முனை - 03.

* S. ஜெகான்,
57A, வாவி வீதி,
சின்ன உப்போடை,
மட்டக்களப்பு.

* K. டிலக்ஷிகா,
38/41, 5ம் குறுக்கு,
புதுநகர்.

* R. ஸ்டனியன்,
தேவகிராமம், அளிகம்பை,
அக்கரைப்பற்று.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 143 முடிவுகள்

**1ம் பரிசு : 400/=**

* J. அதிமதுரா,
38/10B, 5ம் குறுக்கு,
புதூர்,
மட்டக்களப்பு.

**2ம் பரிசு : 300/=**

* அபிகெயில் ஆனந்குமார்,
இல.46, புனித செபஸ்தியார் வீதி,
மட்டக்களப்பு.

**3ம் பரிசு : 200/=**

* வி. தனுஸ்கா,
இல. 60, பிரதான வீதி,
கூழாவடி.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ : ர்)**

# கடந்து வந்த பாதையில்... 7 ஆண்டுகள்

